பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 07 சனிக்கிழமை 21.05.2022 கதிர் 197


## இனி இது ரகசியம் அல்ல!

அமைச்சரவை விஸ்தரிப்பு திருக்கூத்துகள்தான் இப்போதும் தெற்கு அரசியலில் லேட்டஸ்ட் நிலைவரம்.

"ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ முன் அமைச்சராக நான் இன்று(நேற்று) பதவியேற்கும் போது அருவருப்பாக ☞ 2

# ஓகஸ்டுக்கு முன்பு உணவு நெருக்கடி

## அபாயச் சங்கு ஊதுகிறார் பிரதமர் ரணில்



கொழும்பு, மே 21

விவசாயத்திற்கு தேவைாயான உரம் இல்லாமையினால் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திற்குள் உணவு நெருக்கடியை இலங்கை சந்திக்க நேரிடும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

'ஸ்கை நியூஸ்' செய்திச் சேவைக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். ☞ 10

## இனப்படுகொலை நினைவேந்தல் நாள் கனடா அறிவிப்புக்கு ரெலோ வரவேற்பு

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளை இனப்படுகொலை நினைவு நாளாக கனடா அங்கீகரித்தமையை வரவேற்கிறோம் என ரெலோ அமைப்பு தெரிவித்துள்ளது.

ரெலோவின் ஊடகப் பேச்சாளர் கு.சுரேந்திரன் இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில்மேலும்கூறப்பட்டுள்ளதாவது:-

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளான மே 18ஆம் திகதியை இனப்படுகொலைக்கான நினைவேந்தல் ☞ 2

## சுவீகரிப்புக்காகக் காணி அளவீடு கொடிகாமத்தில் தடுக்கப்பட்டது

தனியாருக்குச் சொந்தமான 10.5 பரப்புக்காணியில் அமைந்திருந்த கொடிகாமம் துயிலும் இல்லம், 2009இன் பின்னர் இடித்து அழிக்கப்பட்டு சிறிலங்கா இராணுவத்தினரின் படைமுகாமாக மாற்றப்பட்டிருந்தது.

அந்நிலையில் ☞ 2



## காலிமுகத்திடல் தாக்குதல் விசாரணை உறுதியாகத் தொடரும் என்கிறார் நாமல்



### அவரின் வாக்குமூலத்தையும் பெற்றது சி.ஐ.டி.

காலிமுகத்திடல் மற்றும் அலரிமாளிகைக்கு முன்பாக அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளில் இருந்து தாங்கள் ஒருபோதும் விலக மாட்டோம் எனவும் விசாரணைகளுக்கு தாம் பூரண ஆதரவை வழங்குவோம் எனவும் முன்னாள் அமைச்சரும் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். ☞ 10

## ரயில் கட்டணங்கள் ஜூன் 1 இல் உயரும்

எதிர்வரும் ஜுன் முதலாம் திகதி முதல் ரயில் கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளன.

காங்கேசன்துறை முதல் கல்கிசை வரையான குளிரூட்டப்பட்ட ரயில் சேவைக்காக 2,200 ரூபா கட்டணமாக அறவிடப்படும்.

உத்தரதேவி ரயில் முதல் வகுப்பு - 2,200 ரூபா; இரண்டாம் வகுப்பு - 1500 ரூபா; மூன்றாம் வகுப்பு - 1200 ரூபா.



யாழ்தேவி ரயில் முதல் வகுப்பு - 1700 ரூபா, இரண்டாம் வகுப்பு - 1000 ரூபா.

## இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை இ.தொ.காவின் ஜீவன்,செந்தில் சந்தித்தனர்



இந்திய மத்திய அரசின் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை புதுடில்லியில் அவரின் நிதி அமைச்சில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் மற்றும் இ.தொ.காவின் சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளர் பாரத் அருள்சாமி ஆகியோர் நேற்று சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்கு இந்தியா உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் வழங்க வேண்டும் என ☞ 10

## ராஜபக்ஷக்களுடன் ரணில் டீல் என்கிறார் சாணக்கியன்

ஆறாவது தடவையாகத் தான் இலங்கையின் பிரதமராக வருவதற்காக ரணில் விக்கிரமசிங்க காலிமுகத்திடலில் போராட்டம் நடத்திவரும் பொது மக்களுக்கும் ஒட்டுமொத்த தேசத்திற்கும் துரோகம் இழைத்துள்ளார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே சாணக்கியன் இவ்வாறு பிரதமரை கடுமையாக சாடினார். அங்கு அவர் மேலும்தெரிவிக்கையில்-

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியை இராஜினாமா செய்யவிருந்த நேரத்தில் ரணில் விக்கிரமசிங்க எவ்வித நிபந்தனையுமின்றி தனது சொந்தக் கட்சியினருக்குத் தெரியாமல் பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

கோட்டாபய ராஜபக்ஷ தனது ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்யும் வரையில் ☞ 2

## சிறிதரன் எம்.பிக்கு கொலை மிரட்டலாம்

கிளிநொச்சி - முரசுமோட்டைப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்டு வரும் மணல் மாபியாக்களால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது,

இது தொடர்பில் நேற்று மாலை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடொன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

கிளிநொச்சியில் சட்டவிரோதமாக மண் அகழ்வுகளில் ஈடுபடும் மண் மாபியாக்களால் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கு நான்கு தொலை பேசி இலக்கங்களிலிருந்து கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது ☞ 2

## ஜனாதிபதி முன் பதவியேற்றமை அருவருப்பு அதனால்தான் படம் கூடவே எடுக்கவில்லை!



### இப்படிக் கூறுகின்றார் அமைச்சர் ஹரீன்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன் அமைச்சராக நான் இன்று பதவியேற்கும்போது அருவருப்பாக இருந்தது. அவரின் முகத்தைக் கூடப் பார்க்கவில்லை. அதனால்தான் படம்கூட எடுக்கவில்லை. எனினும், நாட்டுக்காக அவர் முன்னிலையில் அமைச்சராகப் பதவியேற்றேன்.

- இவ்வாறு சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஹரீன் பெர்னாண்டோ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் இன்று காலை ☞ 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
இருந்தது. அவரின் முகத்தைக் கூட நான் பார்க்கவில்லை. அதனால்தான் படம் கூட எடுக்கவில்லை. எனினும், நாட்டுக்காக அவர் முன்னிலையில் அமைச்சராகப் பதவியேற்றேன்."

– பதவியேற்ற பின்னர் வெளியே வந்து இப்படிக் கதை விட்டார், கட்சி மாறிக் குத்துக்கரணம் அடித்து, அமைச்சரான ஹரீன் பெர்னாண்டோ. ஆனால் அவரது புளுகுக் கதைக்கு கையோடு ஆப்பு வைத்தது ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு.

மலர்ந்த முகத்தோடு, ஜனாதிபதியைப் பார்த்து புன்னகை தவழ, நன்கு மகிழ்ச்சியாக ஹரீன் பதவியேற்ற படத்தை வெளியிட்டு இதுதான் இலங்கை அரசியல்வாதிகளின் மூன்றாந்தரச் செயற்பாடு என்பதை அம்பலமாகியது அந்த ஊடக மையம். இந்த அமைச்சர்கள் பதவியேற்பில் சில சுவாரசியங்கள் உண்டு. அவற்றைப் பார்க்கலாம்:–

அரசுக்குள் இருந்துகொண்டு பகிரங்கமாக அரசை விமர்சித்தார் என்று குற்றம் சுமத்தி இராஜாங்க அமைச்சுப் பதவியைப் பிடுங்கிக் கொண்ண்டு மூத்த அரசியல்வாதியான சுசில் பிரேமஜயந்தவைத் துரத்தினார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. 'விட்டது சனியன்' என்று ஆட்சித் தலைமையைத் திட்டித் தீர்த்துக் கொண்டு தலை முழுகினார் சுசில் பிரேமஜயந்த. இப்போது அவருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள பதவியை வழங்குகிறார் கோட்டா. வெட்கமின்றி அவருக்கு முன்னால் போய் நின்று சத்தியப்பிரமாணம் செய்கிறார் சுசில்.

கடந்த பொதுத் தேர்தலை அடுத்து புதிய அமைச்சராகப் பதவி ஏற்கப் புறப்பட்டார் விஜயதாஸ ராஜபக்ஷ. வழியில் போய்க் கொண்டிதுக்கும் போது தமக்கு ராஜாங்க அமைச்சுப் பதவிதான், அமைச்சரவை அந்தஸ்துள்ள பதவி இல்லை என்று கேள்விப்பட்டதும் அமைச்சரவைப் பதவியேற்புக்குச் செல்லாமல் வழியிலேயே திரும்பி விட்டார் அவர். அன்று முதல் பௌத்த பீடங்களுடன் சேர்ந்து கொண்டு ராஜபக்ஷக்களுக்கு ஆப்படிக்கும் கருத்துகளையே பகிரங்கமாக முழங்கி வந்தார் அவர். பொது மேடைகளில் கீழ்த்தரமாகத் தாக்கிப் பேசும் நிலைமையும் தொடர்ந்தது. அவருக்கு நேற்று அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி. அதுவும் நீதி அமைச்சுப் பதவி வழங்கி சத்தியப் பிரமாணம் செய்து வைக்கும் கட்டாயம் கோட்டாவுக்கு.

இப்போது ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து குத்துக்கரணம் அடித்து முழு அமைச்சர் பதவிகளை ஏற்றிருக்கும் ஹரீன் பெர்னாண்டோவும், மனுஷ நாணயக்காரவும் ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கு கோட்டாபய ராஜபக்ஷ மீது பொறுப்புக் குற்றம் கூறி நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பெரும் களேபரம் பண்ணி வந்தவர்கள். இப்போது கோட்டாபய தலைமை வகிக்கும் அமைச்சரவையின் வாலைச் சுருட்டிக் கொண்டு அமர வேண்டிய இக்கட்டு அவர்களுக்கு.

'ஸேர் பெயில்' என்ற கூற்றுடன் கோட்டாபயவுக்கு எதிராகப் பிரச்சாரங்களை முழுமூச்சுடன் ஆரம்பித்த ஹரீன் இப்போது அமைச்சர். இனி என்ன? 'ஸேர் பாஸ்' என்று பிரச்சாரம் செய்ய வேண்டியதுதான்.

பல அமைச்சர்கள் பதவி ஏற்கும் போது 'எங்கே நம்மூர் சீனியர்?' என்று துளாவினேன். டக்ளஸ் தேவானந்தா வைத்தான் சொல்கிறேன். அவர் திங்களன்றுதான் பதவியேற்பார் என்று கூறப்பட்டது.

சு.கவிலிருந்து நிமால் சிறிபால டி சில்வாவுக்கும் மஹிந்த அமரவீரவுக்கும் அமைச்சுப் பதவி கொடுக்க முன்வந்தார் கோட்டா. நிமால் சிறிபால டி சில்வா நேற்று பதவி ஏற்றார். மஹிந்த அமரவீரவைக் காணவில்லை

டக்லஸுக்குக் கொடுக்கப்படவிருந்த கடற்றொழில் அமைச்சு தமக்கு வேண்டும் என்று மஹிந்த அமரவீர அழிச்சாட்டியம் பண்ணினார் என்று தெரிகிறது. அதனால் அந்த அமைச்சு நேற்று இருவருக்கும் கொடுக்கப்படவில்லை. மைத்திரியின் கீழான அரசில் அந்த அமைச்சை மிதப்போடு கையாண்டவர் அமரவீர. இப்போது கோட்டாபயவின் அரசில் இதுவரை அதை வைத்திருப்பவர் டக்லஸ். அந்த அமைச்சு பெரும்பாலும் மீண்டும் டக்ளஸுக்கே வழங்கப்படும் எனத் தெரிகின்றது. மஹிந்த அமரவீர அம்பாந்தோட்டையைச் சேர்ந்தவர். கடற்றொழில் அமைச்சை அவருக்கு வழங்கினால் அங்கு மீனவர்கள் ஊடாக தமது செல்வாக்கை அவர் மீண்டும் கட்டி எழுப்பி, தங்களுக்குப் போட்டியாக அங்கு அவர் விஸ்வரூபம் எடுத்து விடுவார் என்ற அச்சம் மற்றைய ராஜபக்ஷக்களுக்கு. ஆகவே இவ்விடயத்தில் எல்லா ராஜபக்ஷக்களினதும் ஆதரவு டக்ளஸுக்குத்தான். அவருக்கு அந்த அமைச்சைக் கொடுத்தால் ஒருவருக்கும் ஒரு சிக்கலும் வராது என்ற நம்பிக்கை அவர்களுக்கு. அதனால் அது பெரும்பாலும் டக்ளஸுக்குத்தான்.

ஜீவன் தொண்டமான் தேசிய ரீதியான ஓர் அமைச்சை கேட்டு அடம்பிடிக்கிறார். அதுவும் நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சு. முன்னர் தந்தையார் ஆறுமுகம் தொண்டமான் வைத்திருந்தது. வரும்படி தரக்கூடியது போலும். பெரும்பாலும் ஜீவனுக்கு கிடைக்கும் சாத்தியம் உண்டு. அவர் அதை எடுத்தால் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சை என்னிடம் தாருங்கள் என்கிறார் வடிவேல் சுரேஷ். ஆனால் அதுவும் தனக்கு தேவை என்பது ஜீவனின் வற்புறுத்தல். இன்னும் இறுதித் தீர்மானம் ஏதும் எடுக்கப்படவில்லை. ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து வடிவேல் சுரேஷைப்பிடுங்கி எடுப்பதற்கு இந்த அமைச்சை ரணில் – கோட்டா அவருக்கு வழங்க வேண்டியிருக்கும்.

மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது ஆட்சிக்காலத்தில் சதொச தலைவராக இருந்தவர் நளின் பெர்னாண்டோ. 3 கோடி 90 லட்சம் ரூபாவுக்கு சதொச கணக்கில் 'கரம் போர்ட்'களை வாங்கி தேர்தல் சமயத்தில் தாராளமாக விநியோகித்த ஊழல் தொடர்பாக நல்லாட்சி காலத்தில் கைதாகி விளக்கமறியலில் இருந்தவர். அதற்காக இப்போது அவர் வர்த்தக அமைச்சர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும், அவரது முன்னைய அரசையும் பகிரங்கமாக விமர்சிக்கும் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக வைத்துக் காலத்தை ஓட்ட வேண்டிய கட்டாயம் கோட்டாவுக்கு.

இப்படி இன்னும் பல திருக்கூத்துகள் உண்டு. வரும் நாள்களில் அவற்றைப் பார்ப்போம்.

(வளரும்)

## ராஜபக்ஷக்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அனைத்து எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் அரசாங்கத்தில் இணைவதற்கான முன்மொழிவுகளை நிராகரித்திருந்த நிலையிலேயே இந்த பிரதமர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க தற்போது பிரதமர் பதவியில் இருந்து தேசத்தின் உண்மைநிலையை வெளிப்படுத்துகிறார் எனத் தெரிவித்து கடந்த ஒரு வருடமாக எதிர்க்கட்சியினர் கூறிய அதே உண்மைகளை வெளியிட்டு வருகின்றார்.

வெளிநாடுகளுடன் பேசி மூன்று வாரங்களில் எரிவாயு தட்டுப்பாடு, ஒரு மாதத்தில் பெற்றோல் தட்டுப்பாடு, இன்னும் ஓரிரு மாதங்களில் மருந்து தட்டுப்பாடு ஆகியவற்றை முடிவுக்கு கொண்டு வருவார் என்று பிரதமர் கூறுவார் என எதிர்பார்த்தோம். ஆனால் அதற்குப் பதிலாக பெற்றோல் இல்லை என்றும் அடுத்த மூன்று மாதங்களுக்கு கஷ்டம் தொடரும் எனவும் பழைய உண்மைகளையே அவர் கூறினார்.

நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக பேரம் பேசி ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்றிருக்க வேண்டும். ஆனால் அவர் அதற்குப் பதிலாக ராஜபக்ஷ குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காகவே பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

காலிமுகத்திடலில் உள்ள 'கோட்டா கோ கம' தளத்தில் போராட்டம் நடத்தும் பொதுமக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷக்களுடன் டீல் போட்டுள்ளார்.

தன்னை பிரதமராக நியமிப்பதற்காக ராஜபக்ஷ குடும்பத்துடன் அவர் செய்து கொண்ட ஒப்பந்தத்தை – டீலை – மக்களுக்கு வெளிப்படுத்துமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சவால் விடுக்கின்றேன். – என்றார்.

'பதுங்கு குழிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வெளியே கொண்டு வருவதே நீங்கள் செய்த முதலாவது ஒப்பந்தம். திருகோணமலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அவரது மகன் நாமல் ராஜபக்ஷவுக்கும் நாடாளுமன்றத்திற்கு வருவதற்கு உதவுவது இரண்டாவது ஒப்பந்தம். புதிய பிரதி சபாநாயகரைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பின் மூலம் சிறீலங்கா பொதுஜன பெரமுன மீது பஸில் ராஜபக்ஷவுக்கு இருந்த பிடியை பஸில் ராஜபக்ஷவுக்குக் காட்டுவதற்கும் நீங்கள் உதவி செய்தீர்கள்' என நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் பிரதமரை கடுமையாகச் சாடினார்.

## இனப்படுகொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
நாளாக கனடா நாடாளுமன்றம் ஏகமனதாக அங்கீகரித்துள்ளது.

உலகத்திலேயே இந்த விடயத்தில் முதல் அங்கீகாரம் வழங்கிய நாடாக கனடா அமைந்துள்ளது. இதை நாம் வரவேற்கிறோம். இந்த முயற்சிக்கு பின்னணியில் இருந்த புலம்பெயர் உறவுகளுக்குநன்றிகளையும்பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தப் பிரேரணையை கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் கரி ஆனந்தசங்கரி நாடாளுமன்றில் சமர்ப்பித்த வேளை ஏகமனதாக அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அட்டூழிய குற்றங்களுக்கான நீதிக்கான போராட்டத்திற்கு கிடைத்த அங்கீகாரத்தின் முதல் படியாக இதை நாம் கருதுகிறோம்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் முடிவடைந்த யுத்தத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள், யுத்தக்குற்றங்கள் மற்றும் அட்டூழிய குற்றங்களுக்காக நீதியைக் கோரி பல வருடங்களாக எமது இனம் போராடி வருகிறது. கனடிய நாடாளுமன்றத்தின் இந்த அங்கீகாரம் எமது முயற்சிக்கு நம்பிக்கை தருவதோடு ஊக்கம் அளிப்பதாகவும் அமைந்திருக்கிறது.

இது போன்று ஏனைய நாடுகளில் வாழும் புலம்பெயர் உறவுகளும் எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட அட்டூழியக் குற்றங்களுக்கான சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளை ஒருமித்து முன்னெடுக்க வேண்டும் என கோரி நிற்கிறோம்.

## சுவீகரிப்புக்காகக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
நேற்று அக்காணியை நிரந்தரமாக சுவீகரிக்கும் நோக்கில் நடைபெறவிருந்த அளவீட்டுப் பணிகள் பொதுமக்கள் எதிர்ப்பினால் தடுத்துநிறுத்தப்பட்டது.

இதில் பொதுமக்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணி டொமினிக், கட்சியின் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

## சிறிதரன் எம்.பிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முரசுமோட்டை மருதங்குளம் பகுதியில் சட்டவிரோதமாக மண் அகழ்வுப் பணிகளில் ஈடுபடுவோருக்கு எதிராகக் கடுமையாகச் செயற்பட்டு வந்த கரைச்சி பிரதேச சபையின் வட்டார உறுப்பினர் நந்தகுமாரின் வீடு நேற்றுமுன்தினம் இரவு மணல் மாபியாக்களால் சேதமாக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இவ்வாறு சேதமாக்கப்பட்ட வீட்டினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டுள்ள நிலையிலேயே அவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி முன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அமைச்சராகப் பதவியேற்ற பின்னர், ஊடக சந்திப்பை நடத்தினார். அவருடன் அமைச்சுப் பதவியைப் பெற்ற மனு நாணயக்காரவும் இதில் பங்கேற்றிருந்தார்.

இதன்போது அமைச்சர் ஹரீன் தெரிவித்ததாவது:–

'கோ ஹோம் கோட்டா' என்ற எனது நிலைப்பாட்டில் எள்ளளவேனும் மாற்றம் இல்லை.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தூய்மையான அரசியல் தலைவர். அவரைக் குறைகூற விரும்பவில்லை. ஆனாலும், சவாலை ஏற்க அவர் முன்வரவில்லை.

கட்சிக்காகவே நான் அமைச்சுப் பதவியை ஏற்றேன். கட்சியுடனேயே தொடர்ந்தும் பயணிக்க எதிர்பார்க்கின்றேன்.

சவாலை ஏற்று, மூன்று மாதங்கள் அமைச்சராகச் செயற்படுவேன். பஸிலோ வேறு நபர்களோ காலைவாரினால் வெளியேறுவேன்.

கோட்டாபய ராஜபக்ஷவைப் பாதுகாக்க முற்படவில்லை. அவர் பதவி விலகியாக வேண்டும். இந்த விடயத்தில் உறுதியாக இருக்கின்றேன்.

ஜனாதிபதி முன் அமைச்சராக நான் இன்று பதவியேற்கும்போது அருவருப்பாக இருந்தது. அவரின் முகம் பார்க்கவில்லை. அதனால்தான் படம்கூட எடுக்கவில்லை. எனினும், நாட்டுக்காக அவர் முன்னிலையில் அமைச்சராகப் பதவியேற்றேன்.

நாடு ஸ்திரமடைந்த பின்னர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகு–வார் என நம்புகின்றேன்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தம் அமுலாகும் என்ற உறுதிமொழியுடன்தான் பதவி ஏற்றேன். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணை உள்ளிட்ட நிபந்தனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

அமைச்சுப் பதவிக்காக எனது கட்சியை நான் காட்டிக்கொடுக்கவில்லை – என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# மரண அறிவித்தல்



விழி மகிழ
1931
07
10

விழி நெகிழ
2022
05
18

**மாத்தளையை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் மற்றும் அக்லாந்து, நியுசிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட**

## அமரர். லெப்டினன்ட் கேணல். கு. பாலேந்திரா

**( ஓய்வுபெற்ற ஆசிரியர் St. Thomas's College Matale & Jaffna Cenral College)**

**தனது 90 ஆவது வயதில் 18.05.2022 அன்று Auckland, Newzelandல் காலமானார்.**

அன்னார் காலஞ்சென்ற குழந்தைவேலு - யசோதாட்சியின் புதல்வனும், காலஞ்சென்ற திருமதி. ரெட்ணசோதி பாலேந்திராவின் அன்புக்கணவரும், பாலயசோதரன் (Australia), பாலபிரசாந்தன் (Newzealand) ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌரி, கல்பனா ஆகியோரின் அன்பு மாமனாரும், Dr.நீபன், Dr.அனபெல், பிரவீன், கவிஷா, யுகேஸ் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் காலஞ்சென்றவர்களான சிரோன்மணி, விஜேந்திரன், ராஜமணி மற்றும் இந்திராதேவி (Canada) ஆகியோரின் அன்புச்சகோரதரனும் காலஞ்சென்றவர்களான செகநாயகம், Dr.அழககோண, விஜயராஜா, இந்திராணி மற்றும் Prof.குலேந்திரன் - Prof. ஞானகுலேந்திரன் (Australia), ஆகியோரின் அன்புச் சகலனும், ராஜ்குமார்- நளாயினி (UK), Dr. ஸ்ரீகாந்தா - சுலோசனா (Australia), Prof. ஸ்ரீரங்கா - Prof. நியுஷா (Brazil) Dr. ஸ்ரீபதி - Dr. கிருஷ்ணி (UK), இந்திரமலர்- கிரிஷ்ணமூர்த்தி ( canada), யசோதரா- தயாநந்தன் (UK), ஸ்ரீரமணன்- கிரிஷ் (Canada) தவராஜா (Canada), ரதீந்திரன் - சாந்தா (Canada), ஸ்ரீகிரிஸ்ணா - நர்மதா (Australia), ஸ்ரீநாராயிணி - அபிமன்யு (Australia), ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்

**அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது**

**Manukau Memorial Gardend,**
**361 Puhinui Road, Win, Auckland, New Zealand.**
**Sunday 22nd May at 1.00 pm - 3.00 pm**

**உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் இவ்அறிவித்தலினை ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.**

**தகவல் :- பாலயசோதரன் + 61 400 635 521 (Australia)**
**பாலபிரசாந்தன் + 64 21 739 155 (New Zealand)**


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சூத்திரதாரிகளை அம்பலப்படுத்துங்கள்!

வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்குப் பேட்டியளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒரு விடயத்தைப்பட்டவர்த்தனமாக – வெளிப்படையாக – போட்டுடைத்திருக்கின்றார்.

அது – நாட்டின் இன்றைய மிக மோசமான பொருளாதார இக்கட்டுக்கு – நெருக்கடிக்கு – இதற்கு முந்திய நிர்வாகமே முழுக் காரணம் என்ற அவரது குற்றச்சாட்டாகும்.

"நாங்கள் வங்குரோத்து நிலைக்கு வந்து விட்டோம். இலங்கையின் வரலாற்றில் இப்படி ஒரு போதும் நிகழ்ந்ததில்லை. எங்களிடம் டொலர்களும் இல்லை. ரூபாவும் இல்லை." – என்றார் அவர்.

பொதுவாக நாட்டின் இன்றைய இந்தப் பொருளாதாரப் பேரிடர் நிலை திடீரென ஒரு நாளில், ஓர் அரசின் கீழ் ஏற்பட்டதல்ல, தொடர்ந்து வந்த அரசுகளின் தூரநோக்கற்ற – தீர்க்கதரிசனமற்ற – செயற்பாட்டினால் ஏற்பட்ட மோசமான பின்னடைவே இது என்றே ஒரு கருத்து நிலைப்பாடு நிலவுகின்து.

ஆனால், சர்வதேச நிறுவனம் ஒன்றுக்குப் பேட்டியளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கடந்த நிர்வாகத்தில் நடந்த குளறுபடிகளின் விளைவுதான் இது என்று குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டுகின்றார்.

இந்தக் காலகட்டத்தில் அரசின் பதிவுகள், கணக்குகள் கூட ஒழுங்காக இல்லை. அவை இட்டுக்கட்டித் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதையும் அவர் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

அரசின் பொருளாதாரத்தையே நிலைகுலைய வைக்கும் இந்தப்போக்கு இயல்பாக நடந்த ஒன்று அல்ல. திட்டமிட்ட சூறையாடல்தான் இதற்குள் பொதிந்து கிடக்கும் சூத்திரம் என்று தம்மைச் சந்தித்த சில அரசியல் கட்சித் தலைவர்களிடம் பிரதமர் பொறுப்பை ஏற்ற பின்னர் ரணில் விக்கிரமசிங்கவே நேரடியாகக் கூறியிருந்தார் என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்தக் குளறுபடிக்குள் – மோசடிக்குள் – புதைந்து கிடக்கும் உண்மைகளைக் கண்டறிவதற்கு ஒரு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை அமைக்க வேண்டும் எனவும் பிரதமர் விக்கிரமசிங்க அச்சமயம் கூறினாராம்.

இவ்விவகாரத்தில் அவரின் இக்கட்டு புரிகின்றது. சரியோ, பிழையோ, தற்போதைய தமது அரசுக்கு முந்திய அரசு என்றால், இந்த மாத முற்பகுதி வரை அதிகாரத்தில் இருந்த ராஜபக்ஷக்களின் அரசுதான்.

2020 பெப்ரவரியில் அவரது நல்லாட்சி அரசு கலைக்கப்பட்டு, பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் இந்த மாதம் முற்பகுதி வரை இருந்த அரச நிர்வாகம் என்றால் அதற்கு ராஜபக்ஷக்கள்தான் பொறுப்பு.

தனி ஓர் எம்.பியாக இருக்கும் தன்னைப் பிரதமராக்கிய ராஜபக்ஷக்களுக்கு எதிரான இத்தகைய குற்றச்சாட்டுகளை இப்படி – இந்த சமயத்தில் – வெளிப்படையாக முன்வைப்பது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கடி தருவதாக இருக்கும். தொடர்ந்தும் பிரதமர் பதவியில் தாம் காரியமாற்றுவதற்கு, அவ்வாறு உண்மைகளைப் பகிரங்கமாகப் போட்டுடைப்பது சிக்கலை ஏற்படுத்துவதாக அமையும் என அவர் கருதக்கூடும். அப்படி கருதுவதில் நியாயமும் உண்டு.

அதனால், நடந்த பெரும் குளறுபடிகளை – மோசடிக்களை – ஊழல்களை – நிர்வாகச் சீர்கேடுகளை – கண்டுபிடித்து, வெளிப்படுத்தி, அவற்றின் பாதிப்புக்களை அம்பலப்படுத்தும் வேலையைத் தான் நேரடியாக இயக்கிச் செய்யாமல், நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றின் மீது அப்பொறுப்புகளைச் சுமத்தி அதன் மூலம் விடயங்களைக் கையாள வியூகம் வகுக்கின்றார் சாணக்கிய தந்திரசாலியான ரணில்.

எது, எப்படி என்றாலும் வரலாற்றில் முன்னெப்போதுமில்லாத பொருளாதாரப் பேரிடர் நிலையில் நாடு சிக்கிக் கொள்வதற்குக் காரணமாக இருந்தோர் அம்பலப்படுத்தப்பட வேண்டும். எந்த வழியிலாவது அதனைப் பிரதமர் ரணில் செய்தாக வேண்டும்.

## கோட்டா பதவியில் இருக்கும் வரை யார் பிரதமரானாலும் நாட்டு நிலைமைகளுக்குத் தீர்வைக் காணவே முடியாது

### இம்ரான் எம்.பி. ஆரூடம்



(ஹஸ்பர்)

ஜனாதிபதி பதவியில் இருக்கும் வரை யார் பிரதமராக வந்தாலும் நாட்டு நிலைமைகளுக்குத் தீர்வு காண முடியாது கோட்டா அரசாங்கத்தில் தீர்வின்மையே தொடர்கின்றது என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் –

இந்த அரசாங்கம் கடந்த அரசாங்கத்தைக் குறைகூறி மத்திய வங்கிக் கொள்ளையர்களை பிடிப்போம் ஈஸ்டர் தாக்குதல் பிரதான சூத்திரதாரியை கைது செய்வோம் என சொல்லியே ஆட்சிக்கு வந்தவர்களின் தற்போதைய நிலை எந்த நிலையில் தள்ளப்பட்டுள்ளது.

நாட்டின் பிரதான உற்பத்தி பொருள்களில் வீழ்ச்சி கண்டுள்ள இலங்கை நாட்டு தேயிலை ஆடை உற்பத்தி என்பனவும் இதில் அடங்குகின்றன. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிக மோசமாக பாதிப்பை இந் நாட்டு மக்களும் முகங்கொடுத்து செய்வதறியாது இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகள் வேடிக்கையாக மாறியுள்ளன.

கடன் வாங்கும் நாடாக மாறியுள்ள நிலையில் சர்வதேச நாணய நிதியம் கூட இந்தக் கோட்டா அரசு இருக்கும் வரை பேச்சுக்கு தயார் இல்லை என்றும் கூறியிருக்கிறது. இது போன்ற வெளிநாட்டு தூதரகங்களின் தூதுவர்களும் பேச்சுக்கு தயாரில்லை என்ற நிலைப்பாட்டில் உள்ளார்கள். மக்கள் தாங்கி கொள்ளாமல் வீதிக்கு இறங்கி கோட்டா கோ கோம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி இடம் பெற்ற தாக்குதல் கண்டிக்கத்தக்கது. இந்த நேரம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அடித்து கொல்லப்பட்டுள்ளார். இதற்கு யார் பொறுப்புக் கூறுவது பாகிஸ்தானில் இலங்கையர் ஒருவர் கொல்லப்பட்டமை தொடர்பில் இங்கிருந்து இனவாத சாயம் பூசி பேசப்பட்டது. ஆனால் இங்கு கொல்லப்பட்ட எந்த மதமோ இனமோ இருந்தாலும் அதை யார் பொறுப்பேற்பது வாய் மூடி மௌனிகளாக இருக்கிறார்கள். இந்த நேரத்தில் மரணித்த நாடாளுமன்ற உறுப்பினரின் குடும்பத்துக்கும் உறவுகளுக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். மக்களுடைய பொருளாதார நெருக்கடிக்கான தீர்வை நாடாளுமன்றில் முன்வைக்கவில்லை. பொருள்களின் நாளாந்த விலை ஏற்றம் வரிசை என பல பிரச்சினைகள் தொடர்கின்றன. இதற்கான தீர்வை முன்வையுங்கள். தீர்வின்மை பெரும் கவலையளிக்கிறது. அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க பணம் அச்சிட வேண்டியுள்ளது என பிரதமர் வெறுங் ரீமிக்ஸ் கதையே சொல்கிறார்.

எனவே புதிய பிரதமர் அவருடைய எதிர்கால திட்டங்கள் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

## புலிகளுடனான யுத்தம் சரியான வழியில் வெல்லப்பட்டதாக நான் நினைக்கவில்லை

### ஹசன் அலி கூறுகிறார்

(பாறுக் ஷிஹான்)

விடுதலைப் புலிகள் ஓர் இயக்கமாக இருந்தாலும் விடுதலைப்புலிகள் என்ற விடயம் ஒரு சர்ச்சைக்குரிய விடயமாகும். கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற யுத்தம் சரியான வழியில் வெல்லப்பட்டதாக நான் நினைக்கவில்லை. அதாவது உள்நாட்டு யுத்தம் அல்லது பிரச்சினை என்றால் அது ஒரு பேச்சு மேசையில் தான் முடிந்திருக்க வேண்டும். இந்த போரின் முடிவு சமாதான முறையில் நிறைவிற்கு கொண்டு வரவில்லை. பெரும் அழிவுகளுடன் தான் நிறைவடைந்தது என ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹசன் அலி தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பகுதியில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தெரிவித்தவை வருமாறு –

வடக்கு கிழக்கு மாகாண சபையில் முதலமைச்சராக இருந்த வரதராஜ பெருமாள் காலத்தில் ஓர் உறுப்பினராக இருந்துள்ளேன். அது மாத்திரமன்றி வரதராஜ பெருமாள் அவர்கள் தமிழீழ பிரகடனம் செய்த போது வெளிநடப்பு செய்த குழுவிலும் நான் அங்கம் வகித்திருந்தேன். அதாவது இந்த நாட்டை பிரிப்பதற்கு ஒருபோதும் நாங்கள் உடன்பட மாட்டோம் என அப்போது நாம் வெளியேறி இருந்தோம். இந்நிலையில் பின்னர் அங்கு பல பிரச்சினைகள் எழுந்தமையால் நாங்கள் இந்திய அமைதிப்படையின் உதவியுடன் விசேட விமானத்தில் இரத்மலான விமான நிலையத்துக்கு பாதுகாப்பாக அழைத்து செல்லப்பட்டோம்.

மேலும் விடுதலைப்புலிகள் ஓர் இயக்கமாக இருந்தாலும் அந்த இயக்கத்தில் இருந்தவர்கள் விடுதலை புலிகள் என்ற உயரிய சிந்தனைகளில் இருந்தார்களா? என்பதை நாம் சிந்திக்க வேண்டும். அதாவது விடுதலை புலிகளின் உயர் மட்டத் தலைவர்கள் எனக் கூறப்படுவோர் தற்போது கூட சிங்கள கட்சிகளின் உயர் பதவிகளில் வந்து இருக்கின்றார்கள். இவ்வாறானவர்களும் விடுதலைப்புலிகளில் கடந்த காலங்களில் அங்கம் வகித்துள்ளார்கள் என்பதை நாங்கள் புரிந்து கொள்ள முடிகின்றது. ஆகவே விடுதலைப்புலிகள் என்ற விடயம் ஒரு சர்ச்சைக்குரிய விடயமாகும். கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற யுத்தம் வெல்லப்பட்டது என்பதற்காகவே ராஜபக்ஷக்களை மக்கள் ஆட்சிக்குக் கொண்டு வருகின்றார்கள்.

இந்த யுத்தம் வெளிநாடு ஒன்றுடன் செய்யப்படவில்லை. இலங்கை பிரஜைகளுடன் தான் இலங்கை அரசாங்கம் யுத்தம் செய்தது உண்மையாகும். இந்த யுத்தம் சரியான வழியில் வெல்லப்பட்டதாக நான் நினைக்கவில்லை. அதாவது உள்நாட்டு யுத்தம் அல்லது பிரச்சினை என்றால் அது ஒரு பேச்சு மேசையில் தான் முடிந்திருக்க வேண்டும். ஒரு போர்க்களத்தில் நின்று கொண்டு பொதுமக்களை இராணுவம் சுட்டுத்தள்ளி அல்லது ஒரு விடுதலை இயக்கம் இராணுவத்தை சுட்டுத்தள்ளுவதை ஒரு காலமும் யுத்தமோ சமாதானமோ என்று கூற முடியாது.

இந்த போரின் முடிவு சமாதான முறையில் நிறைவிற்கு கொண்டு வரவில்லை. பெரும் அழிவுகளுடன் தான் அந்த யுத்தம் நிறைவடைந்தது. உதாரணமாக தென்னாபிரிக்காவில் 243 இயக்கங்கள் போரிட்டு வந்திருந்தன. அதில் வெள்ளையர், கறுப்பர் குழு மோதலும் இடம்பெற்றிருந்தது. நெல்சன் மண்டேலா அந்த காலகட்டத்தில் வெஸ்மன் ரூட்டோ போன்றவர்கள் இந்தப் போராட்ட இயக்கங்களுடன் எத்தனையோ பேச்சுகளை நடத்தி 11 குழுக்களாக மேற்குறித்த இயக்கங்களை ஒருங்கிணைத்தனர். இவ்வாறு 11 குழுக்களுடனும் பின்னர் அவர்கள் பேச்சு மேற்கொண்டு பிணக்குகளைத் தீர்த்து வைத்தனர். இதனால் தான் அவருக்கு கூட நோபல் பரிசு கிடைக்கப்பெற்றிருந்தது.

இந்த நாட்டிலும் ஓர் இணக்கப்பாட்டுடன் நடந்து முடிந்த யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வந்திருந்தால் இவர்களுக்கும் நோபல் பரிசு கிடைக்க சந்தர்ப்பம் கிடைத்திருக்கும். ஆனால் இந்த யுத்தம் அரைகுறையாக நிறைவடைந்து விட்டது என்பதே உண்மையாகும். சமாதான மேசையில் பேச்சு நடத்தப்பட்டு இந்த யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்படவில்லை. மாறாக பெரும் அழிவு யுத்த அவலத்துடன் தான் இந்த யுத்தம் அரைகுறையாக நிறைவடைந்துள்ளது என்பதை நான் பார்க்கின்றேன். –என்றார்.

# அரசில் இணைந்து செயற்பட முன்வந்தமைக்கு காரணம் இன அழிப்பை மனதில் வைத்தே ஆகும்

## அமைச்சுப் பதவிகளுக்காக அல்ல என்கிறார் நீதியரசர் விக்னேஸ்வலன்



தற்போதைய கட்சி சார்பற்ற அரசாங்கத்தில் இணைந்து செயற்படுவதற்கு நாம் வகுத்த நிபந்தனைகள் நடைபெற்றுவரும் இன அழிப்பை மனதில் வைத்தேயாகும். அமைச்சுப் பதவிகளுக்காக அல்ல.

அரசியல் கைதிகளின் விடுவிப்பை அவர்களின் நிலையை நேரில் பார்த்தவன் என்ற முறையில் முதல் கோரிக்கையாக ரணிலிடம் முன்வைத்தேன்.

– இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நீதியரசருமான க.வி.விக்னேஸ்வரன்.

முள்ளிவாய்க்கால் நினைவுதினமான மே 18 அவர் வெளியிட்ட வாராந்த கேள்வி – பதிலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

**கேள்வி:-** வருடாந்த முள்ளிவாய்க்கால் நிகழ்வை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்? இன அழிப்பின் ஓர் அங்கமா முள்ளிவாய்க்கால் நிகழ்வு?

**பதில்:-** இனப்படுகொலை நடந்து 13 ஆவது வருடம் இன்று பூர்த்தியடைகின்றது. அன்று நடந்த பயங்கரமான இனப்படுகொலையின் தாக்கம் இப்பொழுதும் எம்மைச் சுட்டெரித்துக் கொண்டு நிற்கின்றன.

நடந்த கொரூரமான நிகழ்வுகளுக்கு இன்னும் நீதி கண்டபாடில்லை. 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி நடந்த காரியங்களை நாம் இன அழிப்பு என்று அடையாளப்படுத்துவது தகுந்த காரணங்களுக்காகவே.

உரித்துக்களைக் கேட்ட வடக்கு கிழக்கு தமிழர்களுக்கு எதிராக வன்முறையைத் தொடக்கிவிட்டவர்கள் தொடர்ந்து வந்த மத்திய அரசாங்கங்களே. போரின் இறுதியில் அரச படைகளே எமது மக்களை ஒரு லட்சத்துக்கு மேல் கொன்று குவித்தார்கள். பாதுகாப்பு வலயங்களை அடையாளப்படுத்தி அங்கு போய் இருங்கள் என்று கூறி மக்கள் அங்கு போன பின் சட்டத்துக்குப் புறம்பாக எமது மக்கள் அரச படையினரால் கொலை செய்யப்பட்டார்கள். மற்றவற்றுக்கிடையில் இரசாயனக் குண்டுகளும் பாவிக்கப்பட்டன.

அவ்வாறு கொலைகள் செய்தமை இன அழிப்பின் ஓர் அங்கமே. ஐந்து நடவடிக்கைகள் இன அழிப்பு என்ற சொல்லின் கீழ் அடங்குவன. ஓர் இனக் குழுவின் மக்களைக் கொலை செய்வது ஓர் அங்கம். குறிப்பிட்ட அந்த இனக் குழுவின் அங்கத்தவர்களை உடலாலோ மனத்தாலோ காயப்படுத்தல் இன்னொரு அங்கம்.

மேற்படி இனக்குழுவின் அமைதி வாழ்க்கையை இல்லாது ஆக்கி அவர்களின் வாழ்வாதாரங்களை அழித்து அவர்களுக்கு இன்னல்களை ஏற்படுத்தல் மற்றொரு அங்கம்.

அந்த இனம் குழந்தைகள் பெற்றுக் கொள்ளாது தடுத்தல் நான்காவது அங்கம்.

இனத்தின் குழந்தைகளை அவர்களின் பாரம்பரிய சூழலில் இருந்து அகற்றி வேறு சூழலில் வாழ வைப்பது ஐந்தாவது அங்கம்.

இவை அனைத்தும் இன அழிப்பின் நடவடிக்கைகளே. கொலை மட்டும் இனவழிப்பு என்று கூறிவிடமுடியாது.

நாடாளுமன்றத்தில் பிரசன்னமாகி வாக்களித்ததின் பின்னர் 17.05.2022 இரவு சுமார் 9 மணித்தியாலங்கள் கொழும்பில் இருந்து முல்லைத்தீவு வரை பிரயாணம் செய்து இரவு ஒரு மணிக்கே இங்கு வந்து சேர்ந்தோம். நீர்கொழும்பு முதல் புத்தளம் வரையிலான இடங்களில் சுமார் 70 வருடங்களுக்கு முன்னர் நடந்த இன அழிப்பைப் பற்றி சிந்தித்துக் கொண்டு வந்தேன்.

70 – 75 வருடங்களுக்கு முன்னர் சிலாபத்தில் இருக்கும் முன்னேஸ்வரம் பகுதியில் இந்து தமிழ் மக்களே பெரும்பான்மையாக வாழ்ந்தார்கள். சத்திரங்கள் பல இருந்தன. வெளி கிராமங்களில் இருந்து வரும் பக்தர்கள் சத்திரங்களில் தங்கி முன்னேஸ்வரநாதனைத் தரிசித்து சென்றார்கள். கோவிலைச் சுற்றி தமிழ் மொழி கேட்கும். வீபூதி சந்தனம் அணிந்தவர்களைத் தரிசிக்கலாம்.

அன்று அங்கு பொதுவாக பேசப்பட்ட மொழி தமிழே. இன்று சிலாபத்துறை முற்றிலும் மாறிவிட்டது. அங்கு வாழும் மக்கள் இந்துக்கள் அல்லாதவர்கள். பேசும் மொழி தமிழ் அல்ல. அன்றும் இன அழிப்பு நடந்தமைக்கான சான்றுகள் இருக்கின்றன.

நீர்கொழும்பிலிருந்து புத்தளம் வரை 100 வருடங்களுக்கு முன்னர் எழுதப்பட்ட காணி உறுதிகள் பெரும்பான்மையாக தமிழ் மொழியில் இருந்தன. சில ஆங்கிலத்தில் இருந்தன. அவற்றிலுள்ள பெயர்களும் தமிழ்ப் பெயர்களே. ஆனால் கடந்த 70 வருடத்துக்குள் முற்றிலும் மாறி சிங்கள மொழியிலேயே உறுதிகள் இருக்கின்றன. மிகவும் நாசுக்காக இன அழிப்பு அங்கு நடைபெற்றுவிட்டது. தமிழ் பேசிய இடங்கள் சிங்களம் பேசி வருகின்றன.

இன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் அதே போன்ற மாற்றங்களை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மகாவலி ஆணைக்குழுவால் முல்லைத்தீவு நகரம் வரை காணிகள் அடையாளப்படுத்தப்பட்டு மகாவலி அதிகார சபையின் ஆதிக்கத்தின் கீழ் அவை கொண்டுவரப்பட்டுள்ளன.

அங்கு பலவிதமான நில அபகரிப்புக்கள் நடைபெறுகின்றன.

தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரங்கள் பறிக்கப்பட்டுள்ளன. தொல்பொருள் ஆணைக்குழுவால் அங்கு வாழ்கின்ற தமிழ் மக்கள் தமது பூர்வீக நிலங்களில் இருந்து விரட்டியடிக்கப்படுகின்றார்கள். வேற்றவர்கள் வெளியிலிருந்து கொண்டு வந்து குடியேற்றப்படுகின்றார்கள். உள்ளூர் மக்களுக்கு கிடைக்காத வசதிகள் வெளியிலிருந்து கொண்டுவரப்படும் குடியேற்றவாசிகளுக்கு செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இல்மனைற் போன்ற வளங்கள் சூறையாடப்படுகின்றன. இந்தப் பகுதிகளில் காணப்படும் கருங்கற்கள், விலையுயர்ந்த மரங்கள், கனிய வளங்கள் சூறையாடப்படுகின்றன. இவை எல்லாம் வரப்போகும் இன அழிப்பிற்கு கட்டியம் கூறி நிற்கின்றன.

ஆகவே, முன்னர் நீர்கொழும்பிலிருந்து புத்தளம் வரை நடந்த இன அழிப்பு முல்லைத்தீவு மாவட்டத்திலும் நடந்தேற எத்தனங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

நிலவாரியாக வடக்கு மற்றும் கிழக்கைத் துண்டிக்க தமிழ் மக்களை வெளியேற்றி வேற்று மக்களின் குடியேற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

நாடாளுமன்றத்தில் துணை சபாநாயகர் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருந்த போது அவர் இருந்த ஆசனத்திலிருந்து எழுந்து ரணில் எதிர்புறத்தில் நானிருந்த இடத்துக்கு வந்து தனக்கு ஆதரவு தெரிவித்தமைக்கு நன்றி என்று கூறி தற்போதைய நெருக்கடி கொஞ்சம் குறைந்தவுடன் தமிழ் மக்களின் ஒவ்வொரு குறையையும் படிப்படியாகத் தீர்க்கலாம் என்று கூறினார். 'அதற்கு உங்கள் எல்லோரது ஆதரவுந் தேவை' என்று கூறிச் சென்றார்.

ரணிலின் முன்னைய செயற்பாடுகளை அவதானிக்கும் போது அவர் தமிழ் மக்கள் சம்பந்தமாக தனிப்பட்ட தமிழ் உறுப்பினர்களுக்கு உதவிகள் வழங்குவார். எமது இனத்தின் குறைகளைத் தீர்த்து வைக்க முன்வரமாட்டார், தமிழர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இதுவரை அவர் நடந்து கொள்ளவில்லை என்பது எல்லோருக்குந் தெரிந்த விடயம்.

ஆனால் இப்போது அவர் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையைக் குறைக்க கட்சி சார்பற்ற ஓர் அரசாங்கத்திற்குத் தலைமை வகிக்கின்றார். தமிழ் மக்களின் ஆதரவு அவர்களுக்குத் தேவையாகவுள்ளது. தெற்கிலும் மக்களிடையே மனமாற்றந் தெரிகிறது. இவ்வாறான நிலையிலே எவ்வாறான மாற்றங்களை எதிர்காலத்தில் நாம் எதிர்பார்க்கலாம் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. ஆனால் மாற்றங்கள் நிச்சயம். இதனால் நெருக்குதல்கள் மூலம் நாம் பெற வேண்டியவற்றை நாம் பெற்றேயாக வேண்டும்.

சிலர் நடைபெற்று முடிந்த முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளை ஏன் இத்தனை கரிசனையுடன் நினைவுபடுத்துகின்றீர்கள் என்று கேட்பதுண்டு. அதற்குப் பதில் ஒன்று, உறவுகளை இழந்தவர்களின் சோகம் அவர்களுக்கு நீதி கிடைக்கும் வரை ஆறாது.

இரண்டு, நடந்து முடிந்த நிகழ்வுகளின் உண்மைத் தன்மை வெளி உலகத்துக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்பது முக்கியமானதாகும். மூன்று, ஒரே நாட்டில் அந் நாட்டின் குடி மக்களை ஈவிரக்கமின்றி அரச படைகள் கொன்று குவித்தமைக்கான காரணங்கள் வெளிவரவேண்டும். நான்கு, 2009 இல் இராணுவத்தினரிடம் கேட்கப்பட்ட போது அதி மேலிடத்தில் இருந்து சரணடைந்தவர்களையும் உள்ளடக்கி அவர்கள் யாவரையும் கொன்றழியுங்கள் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது என்று கூறினார்கள். அவ்வாறு ஆணையிட்டவர் அடையாளப்படுத்தப்பட வேண்டும்.

2009 இல் நடந்த இனப்படுகொலை தொடர்ந்து வந்த மத்திய அரசாங்கங்களின் தமிழின அழிப்பு நிகழ்ச்சிநிரலுக்குள் அடங்கியிருந்தன. இவற்றைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருப்பதால் மேலும் இவ்வாறான நடவடிக்கைகள் நடைபெறுவதைத் தவிர்க்கலாம். மீண்டும் அவ்வாறு நடந்தால் உலகம் எவ்வாறு நடந்து கொள்ளும் என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இப்பொழுது பல வெளிநாடுகள் முள்ளிவாய்க்காலில் அன்று நடந்தது என்ன என்பதைச் சல்லடை போட்டு ஆராய்கின்றார்கள். உண்மைகள் இப்பொழுதுதான் வெளிப்படத் தொடங்கியுள்ளன. சாட்சிகளற்ற போரானது வெளிச்சத்துக்கு வரத் தொடங்கியுள்ளது.

அதன் எதிரொலிப்பே அண்மையில் நடைபெற்ற காலிமுகத்திடலின் நடவடிக்கைகள். நாட்டுப்பற்று, மதப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று என்று கூறி தமிழ் மக்களையும் முஸ்லிம்களையும் எதிரிகளாக்கி தமது சுயநல நடவடிக்கைகளிற்குப் பாவித்து வந்துள்ளார்கள் அரசியல்வாதிகள் என்பது புலப்பட்டுள்ளது.

சிங்கள இளைஞர்கள் யுவதிகள் இதுவரை ஆண்டு வந்தவர்களின் கபட நாடகத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

தற்போதைய கட்சி சார்பற்ற அரசாங்கத்தில் இணைந்து செயற்படுவதற்கு நாம் வகுத்த நிபந்தனைகள் நடைபெற்றுவரும் இன அழிப்பை மனதில் வைத்தேயாகும். அமைச்சுப் பதவிகளுக்காக அல்ல.

அரசியல் கைதிகளின் விடுவிப்பை அவர்களின் நிலையை நேரில் பார்த்தவன் என்ற முறையில் முதல் கோரிக்கையாக ரணிலின் முன் வைத்தேன்.

அடுத்து தொல்பொருள் ஆணைக்குழுவை முற்றிலும் நீக்குமாறு கோரினேன்.

வடக்கு கிழக்கில் நிலையூன்றியுள்ள இராணுவத்தைத் தற்போது இருக்கும் தொகையில் அரைவாசியையாவது குறைக்க வேண்டும் என்று கோரினேன். இவை நடைமுறைப்படுத்தப்பட்டால் அரசாங்கத்திலுள்ளவர்களின் மனந் தற்போது மாறியுள்ளதாக நினைத்து இறுதி அரசியல் தீர்விற்கான கோரிக்கைகளை முன்வைக்கலாம் என்று எண்ணியிருந்தேன்.

வடகிழக்கு மக்களின் உண்மையான மனநிலையை அறிந்து கொள்வதற்காக அவர்களின் மக்கள் தீர்ப்பைப் பெற சர்வதேச நாடுகளுடன் சேர்ந்து மத்திய அரசு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன்.

எது எவ்வாறாயினும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஒவ்வொரு வருடமும் நடைபெற்று வருவது தமிழீழத் தமிழர்களின் நிலையை உலகிற்கு அறிவித்து வருகின்றது. அது எம் நாட்டின் ஆட்சியாளர்களின் கொடூரத்திற்கு அடையாளமாக விளங்கி வருகின்றது. அன்று இறந்தவர்களின் ஆத்மா சாந்தியடையவும் இன்று இருப்பவர்களின் மனதில் ஒற்றுமையை வளர்க்கவும் இந் நினைவேந்தல் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு.

# நாட்டையே சீர்குலைத்துள்ள அரசுக்கு என்ன தண்டனை?

## லக்ஷமன் கேள்வி

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமைத்துவம் இல்லாத புதிய அரசாங்கமொன்றை ஸ்தாபிக்க தமது தரப்பினர் தயாராக உள்ளார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர்–

காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் மீதுதாக்குதல்நடத்தியகாரணத்தால்தான் 9 ஆம் திகதி வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன. அங்கு பொலிஸார் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. இதற்கான காணொலிகள் சமூக ஊடகங்களில் உள்ளன.

எமது நாடு இன்று முற்றாக சீரழிந்து விட்டது. இதனை நினைத்து நாமும் மிகுந்த வேதனையடைகிறோம். இரண்டு தரப்பினரும் இதற்காக வெட்கப்பட வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பிழையான தீர்மானங்களே இதற்கெல்லாம் காரணமாகும். அவர் நிச்சயமாக இதற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்.

உர மாணிய விவகாரம், சர்வதேச நாணய நிதியத்திற்கு உரிய நேரத்தில் செல்லாதமை, 20 ஆவது திருத்தச்சட்டம் என அவரின் நடவடிக்கைகளே இதற்கு காரணமாகும்.

20 ஆவது திருத்தச்சட்டத்தைக் கொண்டுவந்தபோது எதிர்க்கட்சிகளிடம் எந்தவொரு கலந்தாலோசனையும் நடத்தப்படவில்லை.

ஜனாதிபதியின் கடந்த கால வழக்குகளுக்காக முன்னிலையான சட்டத்தரணிகளினாலேயே இது கொண்டுவரப்பட்டது. நாம் இதன் ஒரு சரத்தைக்கூட காணவில்லை. இப்படி நிறைவேற்றப்பட்ட திருத்தச்சட்டத்தை நாம் எங்கும் காணவில்லை.

சபாநாயகரும் பொறுப்புக் கூறவேண்டும். யாரும் நாடாளுமன்றில் இல்லாத நேரம் பார்த்து, நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்தி, திருட்டுத்தனமாகத் தான் இதனைக் கொண்டு வந்தீர்கள். அலி சப்றி போன்ற சிரேஷ்ட சட்டத்தரணி இவ்வாறானதொரு திருத்தச்சட்டத்தை கொண்டுவந்தமையிட்டு நாம் வெட்கமடைகிறோம்.

இதனால் இன்று நாடாளுமன்றுக்கு எந்தவொரு அதிகாரமும் இல்லாது போயுள்ளது. பொலிஸ் – இராணுவத்தின் அதிகாரம் என அனைத்தும் ஜனாதிபதியின் கீழ் சென்றுள்ளன.

நல்லாட்சி காலத்தில் பொலிஸ் சுயாதீனமாக இருந்தபோது, அவர்கள் அனைத்து விடயங்களையும் அரசியல் தலையீடு இன்றியே மேற்கொண்டார்கள். இன்று இந்த அரசாங்கம் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் தோல்வியடைந்துவிட்டது. ஆனால் ஆட்சியாளர்கள் இன்னமும் ஆட்சியில்தான் இருந்துகொண்டிருக்கிறார்கள். இது வெட்கத்துக்குரியது.

நாம் புதிய அரசாங்கமொன்றுக்கு ஒத்துழைக்கத் தயாராகவே உள்ளோம். ஆனால் இன்று அமைந்துள்ளது புதிய அரசாங்கம் அல்ல. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான எந்தவொரு அரசாங்கத்துக்கும் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உதவிகள் கிடைக்காது. கிடைத்தாலும் சிறிய உதவியாகத் தான் இருக்கும்.

நாட்டையே சீர்குலைத்த அரசாங்கத்துக்கு தண்டனை என்ன? இந்த ஆட்சியாளர்கள் இல்லாத புதிய அரசாங்கமொன்று ஸ்தாபிக்கப்பட்டால் மட்டும்தான் நாட்டைமீட்டெடுக்க முடியும். அனைவரும் ஒன்றிணைந்து புதிய அரசாங்கமொன்றை உருவாக்க வேண்டும்.

ஆனால், கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் அரசாங்கத்தை உருவாக்க நாம் தயாரில்லை. அப்படியான அரசாங்கத்தை சர்வதேசமும் ஏற்றுக்கொள்ளாது. – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முன்பதிவுகளை இரத்து செய்யும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள்

## புதிய சிக்கலில் இலங்கை

இலங்கைக்கு சுற்றுலா மேற்கொள்வதற்காக முன்பதிவு செய்த பல வெளிநாட்டவர்கள் அதனை இரத்து செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடி நிலை காரணமாகவே இவ்வாறு முன்பதிவுகள் இரத்து செய்யப்பட்டுள்ளன என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தம்மிக்க விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

35 முதல் 40 வீதமான வெளிநாட்டவர்கள் இவ்வாறு தங்களது முன்பதிவுகளை இரத்து செய்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் நிலவும் மின்சாரம், எரிபொருள் மற்றும் எரிவாயு நெருக்கடி காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை எதிர்பாராத வகையில் வீழ்ச்சியடைந்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் முன்பதிவு செய்தவர்கள் அதனை இரத்து செய்திருப்பது நாட்டுக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தும் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தம்மிக்க விஜேசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# போதைப்பொருள் பாவனைக்கு அதிகளவு பொலிஸாரும் அடிமை!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு செயலருக்கு பொலிஸ்மா அதிபர் முறையீடு

போதைப்பொருள் வர்த்தகர்களுடன் தொடர்புகளைக் கொண்டிருக்கும் பொலிஸாரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக பொலிஸ்மா அதிபர் சீ.டி.விக்ரமரத்னவால் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் போதைப்பொருள்களுக்கு அடிமையான பொலிஸாரின் விவரங்கள் என்பன அந்தக் கடிதம் ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய, 2021.01.01 ஆம் திகதியிலிருந்து 2021.10.31 வரையான காலப்பகுதிக்குள் பொலிஸ் திணைக்களத்துக்குள் பொலிஸ் நிலைய அதிபர்கள் நியமனம், பொலிஸாரின் கடமைகளுக்கு தடை ஏற்படுத்தல், பொலிஸ் அதிகாரிகளின் ஒழுக்கக்கேடான செயற்பாடுகளால் அவர்களை கைதுசெய்தமை தொடர்பான விடயங்கள் அந்தக் கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் எதிர்காலத்தில் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைக்கு தடையாக இருக்கும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதிக்குள் 184 பேர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும் அதில் இருவரைத் தவிர ஏனையோர் உரிய முறையில் நியமிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வாறு நியமிக்கப்பட்ட 126 பேர் எவ்வித நேர்முக பரீட்சைகள் ஊடாகவும் தெரிவு செய்யப்படாதவர்கள் என்றும் பொலிஸ் மா அதிபரால் எழுதப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எரிபொருளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் இடைநிறுத்தம்

நாரஹேன்பிட்ட பொலிஸ் போக்குவரத்து பிரிவினூடாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எரிபொருளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க இந்த விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு குறைந்த விலையில் எரிபொருள் விநியோகிக்கப்படுவதாக வெளியான தகவலையடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் எந்தவொரு எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கும் குறைந்த விலைக்கு எரிபொருள் விநியோகிக்கப்படவில்லை என சுமித் விஜேசிங்க குறிப்பிட்டுள்ளார். நாரஹேன்பிட்ட பொலிஸ் போக்குவரத்து பிரிவில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாகனங்களுக்கு எரிபொருளை விநியோகிப்பது தொடர்பில் சபாநாயகரால் பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வீடு திரும்புவதற்கு எரிபொருள் இல்லாவிட்டால் தங்குவதற்கு விடுதியொன்றை முன்பதிவு செய்யுமாறு சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நாடாளுமன்ற அமர்வின் போது இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

# டெங்கு ஒழிப்பு விசேட வேலைத்திட்டம்

அதிக இடர் மற்றும் அபாய வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள 148 வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

புதன்கிழமை முதல் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை இந்த விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 19 ஆயிரத்து 908 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கடந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இது இரண்டு மடங்கு அதிகரிப்பு என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் பதிவான டெங்கு நோயாளர்களில் அதிகமானவர்கள் மேல் மாகாணத்திலிருந்தே அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன், காலி, திருகோணமலை, கண்டி, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

# இலங்கைக்கு கடன் நிவாரணம் வழங்க ஜி7 நாடுகள் ஒத்துழைப்பு!

இலங்கைக்கான கடன் நிவாரணம் வழங்குவதற்கான முயற்சிகளுக்கு ஜி–7 நாடுகள் ஒத்துழைப்பு வழங்குவதாக அறிவித்துள்ளன. உலக வல்லரசுகளின் அமைப்பான ஜி–7 நாடுகளின் நிதியமைச்சர்களது மாநாடு ஜேர்மனியில் இடம்பெறுகிறது. அந்த மாநாட்டில் இணங்கப்பட்ட கடித வரைவு ஒன்றில், இலங்கை பெற்றுள்ள கடன்களுக்கான நிவாரணங்களை வழங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்க இருப்பதாக நிதியமைச்சர்கள் தெரிவித்தனர் எனச் சர்வதேச ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. ஜி 7 நாடுகளின் அறிக்கையில், இந்தியப் பெருங்கடல் தேசத்துக்கான நீண்டகாலத் தீர்வுகளைக் கண்டறிவதில் உறுதியாக இருப்பதாகவும் சாத்தியமான கடன் திட்டத்தில் சர்வதேச நாணய நிதியத்துடன் ஆக்கபூர்வமாக பேச்சு நடத்த ஒத்துழைப்பதாகவும் தெரிவித்துள்ளது.

'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** என்ன? உங்களது நண்பரான(?) முன்னாள் முதலமைச்சரும் ரணிலின் புதிய அரசாங்கத்தில் அமைச்சராகப் போகிறாராமே?

**பதில்:-** வதந்திகளை நம்பி நான் அதிகம் பேச விரும்பவில்லை.

எத்தனை தரம்தான் நானும் அந்தச் சீமானின் இருண்ட அரசியல் பக்கத்தை எடுத்துக் காட்டுவது? எனக்கே அம்முயற்சி அலுத்துவிட்டது. நிரூபணத்தோடு நான் சொல்லும் குற்றச்சாட்டுகளைக் கேட்டு ஒன்று அவர் திருந்த வேண்டும், அல்லது மக்கள் திருந்த வேண்டும். இரண்டும் நடப்பதாய்த் தெரியவில்லை. அது தெரிந்தும் திரும்பத் திரும்ப ஒன்றையே நான் சொல்லிக் கொண்டிருப்பதால் என்ன ஆகப் போகிறது? முன்பொரு முறை நமது முன்னாள் முதலமைச்சருக்கு அகில இலங்கை இந்துமாமன்றம் 'சத்திய வித்தகர்' என்று பட்டமளித்ததாய் ஞாபகம். இன்றைக் காய் இருந்தால் அந்தப் பட்டத்தைச் 'சத்தியம் வித்தவர்' என்றுதான் கொடுக்கவேண்டி வந்திருக்கும்.

முன்னுக்குப் பின் முரணாய்ப் பேசுவதே அவரின் வழக்கமாகிவிட்டது. மற்றவர்களாய் இருந்தால் நம் மக்கள் அதனைப் பெரிதாய்த் தூக்கிப் பிடித்திருந்திருப்



பார்கள். படித்த மனுஷன் என்பதால் அனைத்தையும் அவர்கள் மன்னித்து விடுகிறார்கள், அல்லது மறந்து விடுகிறார்கள்.

* ஜனாதிபதியின் முன் சத்தியப் பிரமாணம் எடுக்க மாட்டேன் என்றார். - பின் அதனையே செய்தார்.
* போராளிக் குழுக்களை அங்கீகரிக்க மாட்டேன் என்றார். - பின்னர் அவர்களுடன் சேர்ந்தே தனிக்கட்சி அமைத்தார்.
* ஈ.பி.ஆர்.எல்.எவ். அணி சிபாரிசு செய்தவருக்கு அமைச்சர் பதவி கொடுக்கமாட்டேன் என்றார். - பின்னர் கூட்டமைப்புடன் பகைத்துக் கொண்டு அதே நபருக்கே பதவி கொடுத்தார்.
* தேர்தலில் வென்றதும் மாவை அண்ணனைக் கேட்டுத்தான் ஆட்சி நடத்துவேன் என்றார். - பின்னர் தமிழ் மக்கள் பேரவைக் கூட்டத்திற்கு அறிவிக்காததற்கு, மாவையின் தொலைபேசி இலக்கம் தன்னிடம் இல்லை என்பதைச் சாட்டாகச் சொன்னார்.
* முதலமைச்சராய் இருந்தபோது ரணிலை வரவேற்க கூட்டத்திற்கு வரமாட்டேன் என்றார். -பின்னர் வலியச் சென்று அவருக்குப் பொன்னாடை போர்த்தினார்.
* அரசாங்கத்திடம் நாம் எதையும் எதிர்பார்க்கக் கூடாது என்று மக்களுக்குச் சொன்னார். - பின்னர் பதவி முடியும் தறுவாயில் தனக்கான 'பேமிற்' வாகனத்திற்காய் விண்ணப்பித்து அரசாங்கத்திடம் இரந்து நின்றார்.
* முன்பு ரணிலைப் 'பொய்யர்' என்றார். - இப்போது அவர்தான் நாட்டைக் காக்கக் கூடிய தலைவர் என்கிறார்.

- இப்படி எத்தனையோ சொல்லிக் கொண்டு போகலாம். பயனில் சொல் பாராட்டுவதால் விளையப் போவது ஒன்றுமில்லை. அவர் முன்னர் சொன்ன முரணான கருத்துகளுக்குப் பரிசாக நம் தமிழ் மக்கள் அவருக்கு நாடாளுமன்றப் பதவியை வழங்கினார்கள். இப்போது அவர் ரணில் பற்றிச் சொல்லும் முரண் கருத்துக்குப் பரிசாக அமைச்சர் பதவி கிடைத்தாலும் கிடைக்கலாம்.

முன்பு, கூட்டமைப்புத் தலைவர், முடிவுகள் எடுக்கும் போது உறுப்பினர்களோடு கலந்து ஆலோசிப்பதில்லை என்று குற்றஞ்சாட்டியவர் இவர். இன்று ரணில் பிரதமராய் அறிவிக்கப்பட்ட அன்றே அவருக்கான ஆதரவை உடன் தெரிவித்தார். அம்முடிவு பற்றித் தனது கூட்டுக் கட்சியினரோடோ தன் கட்சி உறுப்பினர்களோடோ ஆலோசித்தாரா? என்று தெரியவில்லை. 'இப்போதெல்லாம் தலைவர் விக்னேஸ்வரன் எங்களோடு ஒன்றையும் ஆலோசித்துச் செயற்படுவதில்லை' என்று அண்மையில் அக் கட்சியின் பிரசாரச் செயலாளர் அருந்தவபாலன் அறிக்கை விட்ட பிறகும் இதையெல்லாம் பேசி என்ன பயன்? கூட்டமைப்பிலிருந்த போது எதற்கெடுத்தாலும் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்த சிலர் இவரது அடாவடித்தனங்களுக்கு அடங்கிப் போவது இன்னொரு புதுமை.

மாகாணசபை நிர்வாகத்தில் எல்லா விதத்திலும் முழுத்தோல்வி கண்டாலும் தாடியும், விபூதியும், குங்குமமும் தந்த தெய்வீகமான வெளித்தோற்றம் மக்களை ஈர்த்து அவரைப் நாடாளுமன்றம் வரையும் கொண்டு போய்விட்டது. இப்பொழுது ஒரு பெரிய உருத்திராக்கமும் தெரியத் தொடங்கியிருக்கிறது. அது போதாதா அவர் அமைச்சராக? இலங்கை அன்னையின் எதிர்காலம் வரவரக் கேள்விக்குறியாகவே நீள்கின்றது. இவர் பதவியால் வடமாகாணம் அடைந்த நன்மையை முன்னர் பார்த்தோம். நீங்கள் சொன்னது நடந்தால், இலங்கை அடையப்போகும் நன்மையை இனிப் பார்ப்போமாக!

**உலகநாதரின் ஒப்பீனியன் * 'அவ்விய நெஞ்சத்தார் ஆக்கம்' - வள்ளுவர் 'சேர்க்கு' ஒரு பெரிய தாங்ஸ்.**

**2. கேள்வி:-** பொருளாதாரக் கடலில் மூழ்கிக் கொண்டிருக்கும் நமது நாட்டை ரணில் மீட்பார் என்று நினைக்கிறீர்களா?

**பதில்:-** இப்போதைக்கு ஒன்றும் சொல்லமுடியாது. அவரின் பதவிக்கு இரண்டு 'தத்துக்கள்' காத்துக் கொண்டிருக்கின்றன. ஒன்று நாடாளுமன்றத்தில் வரப்போகிற நம்பிக்கையில்லாப் பிரேரணை. அடுத்தது ஜனாதிபதி மாளிகை வாசலிலும், அலரி மாளிகை வாசலிலும் கொந்தளித்துக் கொண்டிருக்கும் இளையோர்தம் சக்தியின் வலிமை. இவை இரண்டிலிருந்தும் ரணில் முதலில் தப்பி வரவேண்டும்.

தன்னுடைய கூர்மையான (குள்ளப்) புத்தியால் ஏதாவது வித்தைகள் செய்து முதல் பிரச்சினையில் இருந்து அவர் தப்பிவந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இரண்டாவது பிரச்சினையிலிருந்து எப்படித் தப்பி வெளிவரப்போகிறார் என்பதுதான் இப்போதைக்கு உயர்ந்து நிற்கும் கேள்வி.

இவற்றிலிருந்தெல்லாம் வெளிவந்துவிட்டாரானால், ஒருவேளை நம் தேசத்தை அவர் மீட்டெடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. நீண்டகால அரசியல் அனுபவம், தகுந்த கல்வி அறிவு, பலதரம் பிரதமராயும், எதிர்க்கட்சித் தலைவராயும் இருந்த அனுபவம், அதனால் உலகத் தலைவர்களோடு அவருக்கு ஏற்பட்டிருக்கும் நெருங்கிய தொடர்பு, முக்கியமாக அவரது அமெரிக்கச்சார்பு என்பவற்றை அவரது தகுதிகளாய்ப் பார்த்தால், அதைச் சமப்படுத்துகிற வகையில் இன்று வேறு தலைவர்கள் எவரேனும் இங்கு இருப்பதாய்த் தெரியவில்லை. ஆகவே தன் தகுதிகளைக் கொண்டு புத்தியால் இயங்காமல், இதயத்தால் இயங்கி அனைவரையும் ஒன்றிணைத்து அவர் தேச அன்னையை மீட்டெடுப்பாரானால் மகிழ்ச்சிதான். மீட்டெடுக்கும் முயற்சியில் ஒருவேளை அவர் வெற்றி பெறலாம். ஆனால் இதயத்தால் இயங்கும் முயற்சியில் அவர் வெல்வாரா என்பது பற்றிச் சிந்திக்க வேண்டித்தான் இருக்கிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?' ஸ்சொறி.. ஸ்சொறி.. 73 இல் வளையுமா?**

**3. கேள்வி:-** கலவரங்களில் ஈடுபட்டவர்களை வேகமாகக் கைது செய்யத் தொடங்கியிருக்கிறார்களாமே?

**பதில்:-** செய்யவேண்டியதுதான்! ஆனால் முதலில் கலவரங்களைத் தூண்டியவர்களைக் கைது செய்ய வேண்டும். அதைச் செய்வார்களானால் பின்னர் மற்றையவர்களைக் கைது செய்வதில் பிழையில்லை என்றே கருதுகின்றேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * திருகோணமலையில் போய் இருந்தவரையுமோ?**

**4. கேள்வி:-** புதிதாகக் காசு அடிக்கத் தொடங்கியிருக்கிறார்களாமே?

**பதில்:-** முன்பு 'அடித்தவை' போதாமல் போய்விட்டன போல.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதியார்! இந்தக் கிண்டல்தானே வேணாங்கிறது...!**

**5. கேள்வி:-** வேற்றுமையும், சுயநலமும், பகை உணர்ச்சியும் கொண்டு நிற்கின்ற கட்சிகள் ஒன்றிணைந்து அமைக்க நினைக்கும் புதிய அரசினால் ஏதேனும் பயன் விளையும் என்று கருதுகிறீர்களா?

**பதில்:-** 'பங்குப் பெண்டாட்டிப் புழுத்துச் செத்தாள்' என்பார்கள். ஆழமான பழமொழி இது. ஒருத்தி பல பேருக்குப் பெண்டாட்டியாயிருந்தால் எல்லோரும் அவளிடம் தம் தேவையை நிறைவேற்றுவதில் உரிமை பாராட்டுவார்கள். அவள் தேவையை நிறைவேற்றுவதிலோ 'அவன் செய்யலாம் தானே, இவன் செய்யலாம் தானே' என்று சாட்டுச் சொல்லித் தப்பப் பார்ப்பார்கள். அதனால்தான் அவள் புழுத்துச் சாவாள் என்றார்கள் போல. நீங்கள் சொல்லுகிற அரசும் பெரும்பாலும் பங்குப் பெண்டாட்டியின் கதியைத்தான் கொண்டிருக்கும் என்று நினைக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * பங்குப் பெண்டாட்டிப் பழமொழிக்கு வாரிதியாரின் ஆஆஆழமான பார்வை. ஹி...ஹி..**

**6. கேள்வி:-** நாட்டு மக்களுக்குப் பிரதமர் விடுத்த அறிக்கையைக் கேட்டீர்களா?

**பதில்:-** கேட்டேன்! அவர் மேல் மதிப்பு உண்டாயிற்று. புத்தியால் பேசாமல் இதயத்தால் பேசினார். நாட்டு மக்களை நோக்கி வந்துகொண்டிருக்கும் பெரும் ஆபத்தைப் பற்றித் தெளிவாக எடுத்துச் சொன்னார். அவர் உரையில் பொய்கள் இருக்கவில்லை. அவர் பேச்சின் யதார்த்தம் மனதை ஆணியாய்க் கீறிற்று. அவர் சொன்ன கண்ணாடிப் பாலத்தால் குழந்தையைக் காவிச் செல்லும் உவமை எதிர்காலம் நினைந்து நெஞ்சை நடுங்க வைத்தது. இந்த உரையால் அவர் மீதான மதிப்பு கொஞ்சம் உயர்ந்து போனது உண்மை.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதியாரிடமிருந்து பாராட்டா? ரணிலுக்குக் கிடைத்திருக்கும் முதல் வெற்றி.**

**7. கேள்வி:-** நாடு இருக்கும் இன்றைய நிலையில் நம் தமிழ்த் தலைவர்கள் என்ன செய்யவேண்டும் என்று கருதுகிறீர்கள்?

(08ஆம் பக்கம் பார்க்க)

# எதிரணி உறுப்பினர்களை விலைக்குவாங்கும் கலாசாரத்தை அரசாங்கம் நிறுத்தவேண்டும்

## ஹக்கீம் தெரிவிப்பு



யுத்தத்தால் உயிரிழந்த தமது உறவினர்களை நினைவு கூறுவதற்கு கடந்த வருடம் தடை விதிக்கப்பட்ட போதும் இம்முறை ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னாலே நினைவேந்தல் நடைபெற்றது .இது ஒரு புதிய சமிக்ஜையை காட்டுகிறது. இதனை அங்கீகரிக்க வேண்டும்.

அத்துடன் அமைச்சு பதவிகளை வழங்குவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் அரசியல் கலாசாரத்தை அரசாங்கம் நிறுத்திக்கொள்ள வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை மூன்றாவது நாளாக இடம்பெற்ற கடந்த 9ஆம் திகதி கலவரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

புதிய அரசியல் கலாசாரம் ஒன்றை உருவாக்கவேண்டும் என பிரதமர் தெரிவித்திருந்தார். அதற்கு ஆதரவளிக்க நாங்கள் தயார். அதேபோன்று அரசியல் தார்மிகத்தையும் ஆளும் எதிர்க்கட்சியினர் பின்பற்ற வேண்டும். குறிப்பாக அமைச்சு பதவிகளை வழங்குவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்குவதை நிறுத்திக்கொள்ளவேண்டும்.

புதிய பிரதமரின் அரசாங்கத்தில் ஆரம்பத்தில் 15 அமைச்சர்கள் என்றார்கள் அதன் பின்னர் 18 என்றார்கள் ஆனால் தற்போது 22 அமைச்சர்கள் எனக் கேள்விப்படுகின்றது. எதிர்க்கட்சியில் இருந்து உறுப்பினர்களை விலைக்கு வாங்கிக்கொண்டே இதனை செய்யப்போவதாகவும் தெரியவருகின்றது.

நாடாளுமன்றத்தில் அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கி சபை ஒன்றை ஏற்படுத்தி நாட்டின் பிரச்சினைக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுப்போம். அதற்கு ஆதரவளிக்க நாங்கள் தயார். ஆளும் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு நாட்டை கட்டியெழுப்புவோம். ஆனால் எதிர்க்கட்சி உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் அரசியல் கலாசாரத்தை நிறுத்தவேண்டும். இந்த அறிவிப்பை ஜனாதிபதிக்கு தெரிவிக்குமாறு சபை முதல்வரைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் கடன் செலுத்த முடியாமல் போயிருப்பதால் நேற்றில் இருந்து நாடு வங்குரோத்து என சட்டரீதியிலாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் யுத்தம் வெற்றிகொண்டு 13 ஆவது வருடத்தை நாங்கள் கொண்டாடுகின்றோம். ஆனால் அதிலும் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது.

காலிமுகத்திடலில் போராடும் மக்கள் முள்ளிவாய்க்காலில் இறந்தவர்களுக்காக அஞ்சலி செலுத்தி இருக்கின்றார்கள். புலிகள் அமைப்பில் இறந்தவர்கள் அதே போன்று உயிர் நீத்த இராணுவ வீரர்களையும் ஒரே நேரத்தில் நினைவு கூர்ந்தனர்.

கடந்த வருடம் முள்ளவாய்க்காலில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றபோது இராணுவத்தினர் அதனை தடுத்து, அவர்களை சிறையில் அடைத்தார்கள்.

ஆனால் இந்த வருடம் காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகவே உயிரிழந்தவர்களை நினைகூரும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது. இதுதான் யுகமாற்றம், புதிய சமிக்ஜை. அதனை நாங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும். இந்த வழியில் நாங்கள் செல்வோம்.

அலரிமாளிகையில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் ஆற்றிய உரையில் எந்த தவறும் இல்லை. ஆனால் அவரின் உரைக்கு பின்னர் உரையாற்றியவர்களே ஆதரவாளர்களை தூண்டிவிடும் வகையில் செயற்பட்டனர்.

வன்முறையைத் தடுக்கத் தவறியமை தொடர்பில் பொலிஸ்மா அதிபரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தென்னகோனும் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டி கொண்டிருக்கிறார்கள் .

அத்துடன் நீதிபதி தடை உத்தரவு பிறப்பிக்கவில்லை எனத் தெரிவித்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பிரதம நீதியரசருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இது நீதிமன்ற அவமதிப்பு எனத் தெரிவித்து செயலாளருக்கு எதிராக வழக்கு தொடுக்குமாறு பிரதம நீதியரசர் சட்டமா அதிபருக்குத் தெரிவித்திருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வெளிவந்திருக்கின்றது. இவை தவறான முன்மாதிரியாகும். – என்றார்.

# 3 எரிபொருள் நிலையங்களுக்கு எதிராக அதிரடி நடவடிக்கை

எரிபொருளை விநியோகிக்காமல் பதுக்கி வைத்திருந்தமை, பீப்பாய்களில் எரிபொருளை வழங்கியமை தொடர்பில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கும் 3 எரிபொருள் நிரப்பும் நிலையங்களின் அனுமதிப்பத்திரம் இரத்துசெய்யப்பட்டுள்ளதாக வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இதேவேளை, பொலிஸ் எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாகனங்களுக்கு எரிபொருளை விநியோகிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த தற்காலிக அனுமதியும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர மேலும் தெரிவித்தார்.

# பாட்டும் நானே? ……

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

**பதில்:-** இதற்குப் பதில் சொன்னால் நம் தலைவர்களுக்கும், உங்களில் பலருக்கும் கோபம் வரும். என்னவோ ஏதோ இலங்கை என்பது எங்களுடைய தேசம். அதை நோக்கி ஓர் பெரும் வறுமைப்புயல் வருவது தெளிவாய்த் தெரிகிறது. இந்த நேரத்தில் நாட்டின் இடர் தீரும்வரைக்கும் நாம் தமிழர்களாய்ச் சிந்திக்காமல் இலங்கையர்களாய்ச் சிந்திப்பதுதான் பொருத்தம் என்று கருதுகிறேன்.

நம் தமிழ்த் தலைவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி ஒருதரம் பேச வேண்டும் (அது நடந்தால்த்தான் நாம் எப்போதோ உருப்பட்டிருப்போமே!). ஒட்டுமொத்த நாட்டின் இடர் தீரும் வரையும் நம்முடைய தனி உரிமைப் போராட்டத்தைச் சிலகாலம் தள்ளி வைப்பதாய்ப் பகிரங்கமாய் அறிவிக்கவேண்டும். அதனோடு புலம்பெயர் தேசங்களிலுள்ள நம் தமிழ்மக்களை இலங்கையின் இடர்தீர துணை புரியுமாறு வேண்டுகோள் விடுக்க வேண்டும். அப்போதுதான் இந்த நாட்டைத் தமிழர்களும் நேசிக்கிறார்கள் என்ற உண்மை சிங்களவர்களுக்கும், உலகநாடுகளுக்கும் தெரியவரும். அதனால் ஈழத் தமிழினத்தின் மீதான மதிப்பு வானளாவி உயரும்.

ஒருகாலத்தில் தமிழ் நாட்டில் தனித் தமிழ்நாட்டுக் கோரிக்கையை திராவிட முன்னேற்றக் கழகமும் முன் வைத்துப் போராடத் தொடங்கியிருந்தது. 1962 இல் இந்திய, சீன யுத்தம் தொடங்கிய போது தமிழ்நாட்டின் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருந்த அண்ணாத்துரை அவர்கள் நாட்டுக்குப் பேரிடர் வந்துவிட்டதால் இந்நேரத்தில் எங்கள் தனி நாட்டுக் கோரிக்கையை நான் வாபஸ் வாங்கிக் கொள்கிறேன் என்று துணிந்து அறிவித்தார்.

அதுபோலத்தான் இன்றைய நிலையில், நம் தலைவர்களும் நடந்துகொள்ள வேண்டும் என்பது என் கருத்து. இதைச் சொன்னால் எல்லோரும் என்னோடு சண்டைக்கு வருவார்கள். முக்கியமாக நம் தலைவர்களுக்குக் கடுங்கோபம் வரப்போகிறது. தனித் தமிழீழத்தின் அக்கறையால் அவர்கள் என்னோடு சண்டைக்கு வரப்போவதில்லை. தமிழீழம், நடந்து முடிந்த போராட்டம் என்கின்ற இரண்டு நோஞ்சான் மாடுகளை வைத்துத்தான், அவர்கள் தங்கள் அரசியல் வண்டிலை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாடுகளைச் சிலகாலம் கழற்றி விடச்சொன்னால் அவர்களுக்குக் கோபம் வராதா என்ன?

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ வாரிதியாருக்கு நடந்து முடிந்த வியாழன் மாற்றம் சரியில்லைப் போல. ஹி.. ஹி..**

**8. கேள்வி:-** ‘ரணிலுடன் பேசித் தமிழர் உரிமையைவென்றெ டுப்போம்’ என்று சம்பந்தர் ஐயா சொல்லியிருப்பதைப் பார்த்தீர்களா?

**பதில் :-** அவர் பேசி வென்றெடுப்பதாய்ச் சொன்ன தலைவர்களின் பட்டியல் அனுமார் வால் போல நீண்டு கொண்டே போகிறது. ‘நுணலும் தன் வாயால் கெடும்’ எனும் பழமொழி ஐயாவுக்குப் பொருந்துமாப்போல் வேறெவருக்கும் பொருந்தாது. அவரும் தான் என்ன செய்வார்? இப்படி ஏதாவது அறிக்கைகள் விட்டால்தானே தலைவராகத் தன் இருப்பைக் காட்டமுடியும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ இந்த முறை அறிக்கையில் தைப்பொங்கலையும், தீபாவளியையும் கைவிட்டமைக்கு நன்றி சொல்வோமாக!**

**9. கேள்வி: –** ரணிலின் கோரிக்கையை ஏற்று, சட்ட மறுசீரமைப்புக் குழுவின் தலைவராய் வர சுமந்திரன் சம்மதித்தமை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:–** ஒரு நாட்டுக்குள் இருந்து கொண்டே, எங்கள் உரிமையை வென்றெடுப்பது என்று முடிவான பிறகு சட்டமாற்ற நகர்வுகளில் தமிழர்கள் பங்கேற்காமல் இருக்க முடியாது. இன்றைய நிலையில் அதற்குப் பங்களிக்கச் சுமந்திரனை விட்டால் வேறெவரும் பொருத்தமாய் இருப்பார் என்றும் தோன்றவில்லை. ஆனால் ஒன்று, கடந்த நல்லாட்சிக் காலத்தில் ரணிலை நம்பிச் சுமந்திரன் பெற்றுக் கொண்ட பழிகள் அதிகம். ஆட்சி கவிழாமல் முட்டுக் கொடுத்துக் கொண்டு நின்றும், நம் இனத்திற்காக இவர்கள் எதனையும் அப்போது பெற்றுக் கொள்ளவில்லை என்று சொல்லப்படும் குற்றச்சாட்டில் நியாயம் இருப்பதாகவே படுகிறது. ஆகக் குறைந்தது நில அபகரிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, தொல்லியல் திணைக்களத்தின் எல்லை மீறிய செயற்பாடுகள் போன்றவற்றில் கூட, ஆதரவளித்த நம்மவர்க்கு ரணில் பெரிய அளவில் எந்த நன்மையையும் செய்யவில்லை என்பது வெளிப்படை.

அதனால் இம்முறை ரணிலின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளும் அதே நேரத்தில் நம் இனத்திற்கான சில கோரிக்கைகளையும் முன் வைத்தே சுமந்திரன் செயற்படவேண்டும். இல்லாவிட்டால் இவருக்கு ரணிலோடு ஏதோ ‘டீல்’ இருப்பதாய்ச் சொல்லப்பட்டுவரும் கருத்து உண்மையாகிவிடும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ சுமந்திரனோடு வாரிதியாருக்கு இருந்த ’டீலில்’ ஏதாவது பிரச்சினையோ? ஹி..ஹி..**

# ஹெரோயினுடன் மூன்று பேர் கைது ஒரு கோடியே 79 லட்சம் ரூபா மீட்பு!

ஹெரோயின் மற்றும் ஹெரோயின் வியாபாரத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட ஒரு தொகை பணத்துடன் பெண்ணொருவர் உள்ளிட்ட 3 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கொடகம – அத்துருகிரிய பிரதேசத்தில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பில் 294 கிராம் ஹெரோயினுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய அங்கமுவ – பாதுக்க பிரதேசத்தில் 3 கிலோ 300 கிராம் ஹெரோயினுடன் பிரிதொரு சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இண்டாவது சந்தேகநபரிடமிருந்து பெற்றுக் கொண்ட தகவலுக்கமைய போதைப்பொருள் வியாபாரத்துடன் தொடர்புடைய மற்றும் அதற்கு உதவிகளை வழங்கியமை தொடர்பில் அங்கமுவ – பாதுக்க பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணிடமிருந்து ஹெரோயின் வியாபாரத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஒரு கோடியே 79 லட்சத்து 36 ஆயிரத்து 500 ரூபா பணமும், போதைப்பொருள் வியாபாரத்துக்காக உபயோகிக்கப்பட்ட ஓட்டோ ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த மூவரும் டுபாயிலிருந்து போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ள நபரொருவருடன் தொடர்புடையவர்கள் என்பதும் , டுபாயில் உள்ள நபர் கைது செய்யப்பட்ட பெண்ணின் கணவன் என்பதும் மேலதிக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினர் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# யுத்த அட்டூழியங்களுக்கு நீதிவழங்கப்படாமல் அனைவருக்குமான வளமான வாழ்வு கனவே!

## ‘சுபீட்சத்தின் நோக்கு’ வேலைத்திட்டத்துக்குப் பதிலாக ராஜபக்ஷ அரசு வறுமையையே மக்களுக்கு வழங்கியது



**மரியோ அருள்தாஸ்**
(SOAS லண்டன் பல்கலைக்கழகத்தின் கலாநிதி ஆய்வு நிலை மாணவரும், இலங்கையின் சமத்துவம் மற்றும் நிவாரணத்துக்கான மக்கள் (PEARL) அமைப்பின் ஆலோசகரும்)

இன முரண்பாட்டுக்கு அடிப்படையாக அமைந்த காரணங்களை அகற்றும் வகையில் ஆட்சி முறையில் அடிப்படையான மீள்கட்டமைப்பு ஒன்றை மேற்கொள்ளாமல், அத்துடன் யுத்தத்தில் இழைக்கப்பட்ட பாரிய அட்டூழியங்களுக்கு நீதி வழங்கப்படாமல் மற்றும் பொறுப்புக் கூறல் மேற்கொள்ளப்படாமல் இருப்பின் இலங்கையில் கடந்த காலத்தில் இடம் பெற்ற விடயங்களே மீண்டும் ஏற்படுவதுடன் அனைத்து குடிமக்களுக்குமான ஒருமைப்பாடு மற்றும் வளமான வாழ்வு என்பன கனவாகவே அமையும்.

கடந்த வாரம், 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் இடம்பெற்ற மிகத் தீவிர வன்முறையை இலங்கை எதிர்கொண்ட வாரமாக பதிவாகியுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு கோரி ஒரு மாத காலமாக கொழும்பில் இடம் பெற்று வரும் அமைதியான ஆர்ப்பாட்டத்தின் மீது அரசாங்கத்துக்கு ஆதரவான கலகக்கார குழு தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

போராட்டக்காரர்கள் விரைவான பதில் தாக்குதலை மேற்கொண்டனர். அரச ஆதரவு கலகக் குழு உறுப்பினர்கள் துரத்தித் துரத்தி தாக்கப்பட்டு அவர்களின் ஆடைகள் களையப்பட்ட காட்சிகள் சமூக ஊடகங்களில் வலம் வந்த வண்ணமிருந்தன. அதன் தொடர்ச்சியாக சிங்கள மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட தென் இலங்கைப் பிரதேசங்களில் இடம் பெற்ற வன்முறைகளின் காரணமாக எட்டுப் பேர் உயிரிழந்ததுடன் நூற்றுக்கும் மேற்பட்ட சொத்துக்கள் தீக்கிரையாகின. இந்தச் சேதங்களில் பெரும்பாலானவை ஜனாதிபதியின் கட்சியுடன் இணைப்புகளைக் கொண்ட தரப்புகளுக்கே ஏற்படுத்தப்பட்டன.

அதன் பின்னர் ஜனாதிபதியின் மூத்த சகோதரரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ தனது பதவியைத் துறந்து கடற்படைதளம் ஒன்றுக்குள் தஞ்சம் புக வேண்டிய நிலை உருவானது. தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட வடக்கு கிழக்கு பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த கடற்படைத் தளம் யுத்த காலத்தின் போது பிரபலமான சித்திரவதைக் கூடமாகவும் செயற்பட்டு வந்தமை இங்கு நினைவூட்டத்தக்கது.

தற்போது அவரின் பதவி இன்னொரு பழைய முகத்தினால் நிரப்பப்பட்டுள்ளது – ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ரணில் விக்கிரமசிங்க புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ளார். கடந்த காலங்களில் ஐந்து முறை பிரதமராக பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்க ஒரு தடவையேனும் தனது முழுமையான பதவிக் காலத்தை பூர்த்தி செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டமை ஒரு சுவாரசியமான விடயமாகும். தனது முந்தைய பதவிக் காலங்களில் ஊழல்களைக் கண்டும் காணாமல் இருந்தவர் என்பதும் பல தசாப்தங்களாகத் தொடரும் இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு கிடைத்த வாய்ப்புகளை பயன்படுத்தாதவர் என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படும் ஒரு நபராக ரணில் உள்ளார்.


ராஜபக்ஷக்கள் உச்ச நிலையிலிருந்து சடுதியாக வீழ்ச்சியடைவதற்கு பொருளாதார நெருக்கடி காரணமாக அமைந்தது. பல தசாப்தமாக மேற்கொள்ளப்பட்ட தவறான பொருளாதார முகாமைத்துவம் மற்றும் அவர்களின் ஜனரஞ்சகக் கொள்கைகளாலேயே இந்தப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது.

இரண்டு வருடத்துக்குக் குறைவான காலப்பகுதிக்கும் முன்னர் இலங்கையின் இந்த மிகவும் முக்கியமான குடும்பம் நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பாரிய வெற்றியைப் பதிவு செய்தது. ஆட்சியின் மீதான முற்று முழுதான கட்டுப்பாட்டை ராஜபக்ஷக்கள் கொண்டிருந்தனர்.

2019 ஜனாதிபதித் தேர்தலில் குறிப்பிடத்தக்க பெரும்பான்மையுடன் வெற்றி பெற்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சிங்களப் பொதுமக்கள் அவரது வெற்றியைக் கொண்டாடிக் கொண்டிருந்த காலப்பகுதியில் தனது அதிகாரத்தை மேலும் வலுப்படுத்திக்கொண்டமையுடன், நாட்டின் அரச கட்டமைப்பு மற்றும் பொருளாதாரத்தில் தனது குடும்பத்தின் ஆதிக்கத்தை மேலும் வியாபிக்க வைத்தார். அவரின் சகோதரரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவியேற்றதுடன் அந்தக் குடும்பத்தின் ஏனைய பல உறுப்பினர்களுக்கு முக்கிய அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டன.

ஐக்கிய தேசியக் கட்சியால் நாடாளுமன்றத் தேர்தலில் தேசியப்பட்டியல் மூலம் ஒரேயொரு ஆசனத்தையே பெற முடிந்தது. சிங்கள வாக்காளர்களின் அதிக பெரும்பான்மையான வாக்குகள் ஜனரஞ்சக மற்றும் இனவாத இயங்கு தளத்தில் செயற்பட்ட அவர்களின் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு வழங்கப்பட்டன. இதன் மூலமாக ராஜபக்ஷக்களின் வெற்றி கிட்டத்தட்ட முழுமையான வெற்றியாக அமைந்திருந்தது. தேர்தல் காலங்களில் ராஜபக்ஷக்களின் பொதுஜன பெரமுன கட்சி நாட்டுமக்களுக்கு வளம், சௌபாக்கியம் மற்றும் நாட்டில் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தைப் பாதுகாத்தல் என்பன போன்ற வாக்குறுதிகளை பொதுமக்களுக்கு வழங்கியிருந்தது,

2019 மற்றும் 2020 களில் அடைந்த பாரிய தேர்தல் வெற்றிகளின் பின்னர் ராஜபக்ஷக்கள் தமது ஆட்சிக் கட்டுப்பாட்டை வலுப்படுத்தியதுடன் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களைப் பிரதிகூல நிலைக்கு தள்ளும் நடவடிக்கைகளை அமுல்படுத்தினர். தமிழ் பிரதேசங்களில் இராணுவமயமாக்கலை அதிகரித்தல், தமிழ் மக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு தொந்தரவுகளை ஏற்படுத்தல் மற்றும் கொவிட் தொற்றால் மரணித்த முஸ்லிம்களின் உடல்களைக் கட்டாய தகனம் செய்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் சிங்களவர்கள் அல்லாத சமூகங்களுக்கு அந்தச் சமூகங்களின் உறுப்பினர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளே என்ற செய்தியை வழங்கும் நோக்கத்துடன் ராஜபக்ஷ அரசாங்கம் செயற்பட்டமை புலனாகியது.



எவ்வாறாயினும், சிங்களப்பெரும்பான்மை மக்களால் முன்னெடுக்கப்படும் தற்போதைய எதிர்ப்பு போராட்டங்கள் நீண்டகாலமாக நிலைத்திருக்கும் மனித உரிமைகளுடன் தொடர்புடைய கரிசனைகள் காரணமாகவோ அல்லது நிறைவேற்றப்படாத பொறுப்புக் கூறல் காரணமாகவோ உருவாகவில்லை, அரசாங்கத்தின் தவறான பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக உருவான பொருளாதாரச் சுமைகள் காரணமாகவே இந்த ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

தேர்தல்களின் போது ராஜபக்ஷக்களால் வாக்குறுதியளிக்கப்பட்ட ‘சுபீட்சத்தின் நோக்கு’ என்பதற்குப் பதிலாக மக்களுக்கு வறுமை மற்றும் துன்பங்களையே வழங்க முடிந்தது. இது முன்னொருபோதுமில்லாத எதிர்ப்பை அரசாங்கத்துக்கு ஏற்படுத்தியது. இலங்கை சுதந்திரமடைந்தது முதல் இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகளுடன் இணைந்து காணப்படும் சிங்கள பௌத்தம் முதன்மைப்படுத்தப்படல் என்ற நோக்கம் காரணமாக அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் நாட்டின் பொருளாதாரத்தின் சிறந்த நலன் மற்றும் அனைத்து குடிமக்களுக்கும் வளம் என்ற நோக்கில் இருந்து விலகி சிங்கள பௌத்த இன மேலாதிக்கத்தைப் பேணுவதற்கு ஏற்ற வகையிலேயே தமது நிதிக் கொள்கை தீர்மானங்களை மேற்கொண்டு வந்தன.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதல் மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட எதிர்த்தாக்குதல் என்பவற்றின் பின்னர், அரசாங்கம், இராணுவத்துக்கும் பொலிஸாருக்கும் அசாதாரண அதிகாரங்களை வழங்கும் ஒழுங்குவிதிகளைப் பிறப்பித்தல் போன்ற, வடக்கு கிழக்கு பிரதேசங்களில் தமிழ் மக்கள் இடையே முன்னர் பயன்படுத்தி பரீட்சிக்கப்பட்ட உத்திகளைப் பயன்படுத்தியது. நாட்டில் ஏற்படுத்தப்பட்ட ஊரடங்கு சட்டம் காரணமாக கொழும்பின் வெறிச்சோடிய வீதிகளில் இராணுவ வாகனங்கள் வலம் வந்தன. சோதனைச் சாவடிகள் உருவாக்கப்பட்டு இராணுவ வீரர்கள் வாகனங்களை நிறுத்தி சோதனைகளை மேற்கொண்டனர்.

பதற்றம் தொடர்ந்தது. வன்முறையை பயன்படுத்தும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கண்ட இடத்தில் சுட்டுக்கொல்லப்படுவர் என இராணுவமும் பொலிஸாரும் எச்சரித்தனர். அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகள் மீதான கண்டனங்கள் உடனடியாக வெளிவரத் தொடங்கின – ஐக்கிய அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இராணுவம் களம் இறக்கப்பட்டமை மற்றும் போராட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் தனது கரிசனையை வெளியிட்டது.

அவசரகால ஒழுங்குவிதிகளை உடனடியாக இரத்துச் செய்யுமாறு சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியது. ஊரடங்குச் சட்டத்தை பொருட்படுத்தாது மீள ஒன்று கூடிய போராட்டக்காரர்கள் அரசாங்கத்துக்கு ஆதரவான கலகக்காரர்களால் தாக்கியழிக்கப்பட்ட தமது கூடாரங்களை மீளக் கட்டியெழுப்ப ஆரம்பித்தனர். சிங்கள சிவில் சமூகம் மற்றும் எதிர்க்கட்சிகள் என்பன அரசாங்கத்தின் செயற்பாடுகளைக் கண்டித்ததுடன் போராட்டக்காரர்களுடனான தமது ஒருமைப்பாட்டை மீள உறுதி செய்தனர்.

ராஜபக்ஷக்களின் இந்தச் செயற்பாடு நடுநிலை வகித்தவர்களையும் போராட்டக்காரர்களுக்கு ஆதரவளிக்கும் நிலைப்பாட்டுக்கு நகர்த்தியது. இலங்கையில் அமைந்த அரசாங்கங்களில் எல்லோராலும் மிகவும் வெறுக்கப்பட்ட அரசாங்கம் என்ற தனித்துவம் மிக்க சாதனையை வரலாற்றில் ஏற்படுத்திய அரசாங்கமாக இந்த அரசாங்கம் காணப்படுகின்றது. யுத்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பு மற்றும் தொடர்ச்சியான அடக்குமுறை என்பவற்றால் தமிழர்கள் இந்த அரசாங்கத்தை வெறுக்கின்றனர். முஸ்லிம்களுக்கு எதிரான பாகுபாடு மிக்க கொள்கைகளை உருவாக்கியமை மற்றும் அந்தச் சமூகத்துக்கு எதிராக இனக் கலவரங்களை மேற்கொண்டமை காரணமாக அம்மக்கள் இந்த அரசாங்கத்தை வெறுக்கின்றனர். தற்போது, தமக்கு இந்த அரசாங்கம் ஏற்படுத்திய பொருளாதார பேரிடர் காரணமாக சிங்கள மக்களும் இந்த அரசாங்கத்தின் மீது வெறுப்பு மிக்கவர்களாகக் காணப்படுகின்றனர்.

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்தமை கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியை தொடர்வதை உறுதி செய்வதற்கான ஒரு நகர்வாகவே பரந்த அளவில் நோக்கப்படுகின்றது. இறுதியாக போராட்டக்காரர்கள் கலைந்து விடுவர் என்ற எதிர்பார்ப்புடனேயே இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும், இந் நகர்வு செயற்பாட்டாளர்களை திருப்திப்படுத்துவதாக அமைந்திருக்கவில்லை, அவர்கள் ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்ற தமது கோரிக்கையில் உறுதியாகவுள்ளனர்.

தமிழர்களைப் பொறுத்தளவில் ரணில் விக்கிரமசிங்க ஒரு பரிச்சியமான எதிரியாவார். மேலும், அவரது மீள்வருகைக்கு பிரதான தமிழ்த் தேசியக் கட்சிகள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளன.

(10ஆம் பக்கம் பார்க்க)

# தமிழினப் படுகொலைதான் எனக் கனடா நாடு அங்கீகரித்தமை தமிழ் மக்களின் நீதிதேடும் நெடும் பயணத்தில் ஒரு மைல் கல்!



## பொ.ஐங்கரநேசன் தெரிவிப்பு

இலங்கையில் நடந்தது தமிழினப் படுகொலையே என்பதை அங்கீகரித்துக் கனேடியப் நாடாளுமன்றம் ஏகமனதாகத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. இலங்கை அரசு மிகக் கொடூரமான யுத்தத்தைத் தொடுத்துத் தமிழினப் படுகொலையை நிகழ்த்தியே 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது. அப்போதிருந்தே தமிழினம் இனப்படுகொலைக்கு நீதிகேட்டு உலக நாடுகளினதும் ஐக்கிய நாடுகள் சபையினதும் கதவுகளைத் தட்டிவந்த நிலையில் உலகின் முதல் நாடாகக் கனடா இலங்கையில் நடந்தது இனப்படுகொலைதான் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளது. இது தமிழ் மக்களின் நீதிதேடும் நெடும் பயணத்தின் ஒரு மைல்கல் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

கடந்த 18ஆம் திகதி கனேடிய நாடாளுமன்றில் இலங்கையில் நடந்தது தமிழினப் படுகொலைதான் என்பதை ஏற்றுத் தீர்மானம் நிறைவேற்றியமை தொடர்பாகப் பொ.ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இலங்கையில் நடந்த யுத்தம் பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தமே என்று அரசதரப்புப் பரப்புரை செய்து வருகிறது. இது ஓர் போர்க்குற்றமே என்று அரசாங்கத்தைக் காப்பாற்றும் முகமாகச் சில தரப்புகள் கூறிவருகின்றன. ஆனால், நிகழ்ந்தது தமிழினப் படுகொலையேயென தமிழினம் நீதிகேட்டுத் தசாப்த காலத்துக்கும் மேலாகப் போராடி வருகிறது. இந்நிலையிலேயே அவர்களது போராட்டத்துக்குக் கிடைத்த ஒருபெரும் வெற்றியாகக் கனேடிய நாடாளுமன்றத்தின் தீர்மானம் அமைந்துள்ளது.

கனேடிய நாடாளுமன்றில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி இலங்கையில் நடந்தது இனப்படுகொலைதான் என்பதை ஏற்று ஆண்டுதோறும் மே-18 ஆம் திகதியைத் தமிழர் இன்படுகொலை நினைவேந்தல் நாளாக அங்கீகரிக்க வேண்டும் என்ற பிரேரணையை முன்வைத்தபோது எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் பிரேரணை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தமிழினம் தன் இலக்கை நோக்கி முன்னேறிச் செல்ல கனேடிய நாடாளுமன்றின் இத்தீர்மானம் ஒரு கொழுகொம்பாக அமைந்துள்ளது.

கனேடிய நாடாளுமன்றில் இப்பிரேரணையைக் கொண்டு வந்தமைக்காக நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரிக்கும், ஏகமனதாக ஏற்றுக்கொண்ட ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இதன் பின்னால் நின்று உழைத்த புலம்பெயர் தமிழ்ச் சமூகத்துக்கும் தமிழ்கூறும் நல்லு லகு தலை சாய்த்துத் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது. - என்றும் தெரிவித்துள்ளார்.

## காலிமுகத்திடல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

இந்தத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் பெயரிடப்பட்ட அனைவரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் வேண்டப்பட்டமைக்கு அமைவாக சரணடைந்துள்ளனர் அல்லது வாக்குமூலங்களை வழங்கியுள்ளனர்.

வன்முறைகளிலும் கொலைகளிலும் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கட்சி மற்றும் அரசியல் பாகுபாடின்றி சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்தபடாவிட்டால் சட்டம், ஒழுங்கு மற்றும் சமூகம் என்பன சீர்குலைந்து விடும்.

இந்த வன்முறைச் சம்பவங்களுக்குப் பின்னால் அரசியல் நோக்கத்துடன் வன்முறைச் செயல்களை வழிநடாத்தும் ஒழுங் கமைக்கப்பட்ட குழுக்கள் மற்றும் வன்முறையின் பின்னர் தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்ட இளைஞர்கள் என இரண்டு குழுக்கள் உள்ளன.

வன்முறையின் பின்னர் தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்ட இளைஞர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டும். தாக்குதல் மற்றும் தீ வைப்புச் செயல்களை வழிநடாத்தியவர்களுக்கு எதிராக சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும்.- என்றார்.

இதேவேளை இந்தத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிடம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நேற்று சுமார் நான்கு மணித்தியாலங்கள் வாக்குமூலத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய நிதி அமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்திய நிதி அமைச்சரிடம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இந்தச் சந்திப்பின் போது கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு இந்திய அரசாங்கம் தொடர்ச்சியாக வழங்கிவரும் ஒத்துழைப்பு புக ளுக்கு இந்த சந்திப்பின் போது நன்றி தெரிவித்துள்ள இ.தொ.கா., இந்த பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங் கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்களுக்கு பொருளாதார ரீதியான உதவிகளை இந்தியா வழங்க வேண்டும் என்பதுடன் நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு இலங் கைக்கு அனைத்து விதத்திலும் இந்திய அரசாங்கம் உதவிகளை வழங்க வேண்டுமெனவும் இந்திய நிதி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த கோரிக்கைக்கு இந்தியா சாதகமான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் முன்னெடுக்கும் என இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

## ஒகஸ்டுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டில் பயிர்ச்செய்கைக்கான உரம் இல்லை எனவும், இதனால் நெல் சாகுபடி பருவத்தில் முழு உற்பத்தியும் இருக்காது எனவும் அவர் கவலை தெரிவித்தள்ளார். எனவே ஒகஸ்ட் மாதம் முதல் இலங்கையில் உணவு நெருக்கடி ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

மேலும், இந்த நேரத்தில் உலகளாவிய உணவு நெருக்கடியும் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். நாட்டின் தற்போதைய நெருக்கடிக்கு கடந்த நிர்வாகமே காரணம் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் வங்குரோத்து நிலைக்கு வந்துவிட்டோம் - இலங்கையில் முன்பு ஒருபோதும் இவ்வாறு நடக்கவில்லை" - என்று அவர் கூறினார்.

"எங்களிடம் டொலரும் இல்லை, ரூபாவும் இல்லை. நாங்கள் தற்போது நிலையான நிலையில் இல்லை. மக்களால் இனியும் சுமையைத் தாங்க முடியாது" - எனவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையினால் கடனை திருப்பி செலுத்த முடியாததை முன்னிட்டுத் தாம் வெட்கப்படுகிறார் எனப் பிரதமர் இதன்போது தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முன்னைய நிர்வாகமே பொறுப்புக்கூற வேண்டும் என்றும் பிரதமர் வலியுறுத்தினார்.

## யுத்த அட்டூழியங்களுக்கு நீதிவழங்கப்படாமல் .......

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் மற்றும் இந்நாள் பிரதமராகிய ரணில் யுத்தக் குற்றங்களுக்கான பொறுப்புக் கூறலை நிராகரிக்கின்றவர் என்பதுடன் தான் 'மஹிந்த ராஜபக்ஷவை மின்சாரக் கதிரையில் இருந்து பாதுகாத்தவன்' எனவும் அரச அதிகாரிகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு இழுத்துச் செல்லப்படுவதில் இருந்தும் அவர்களைப் பாதுகாத்தவன் என்றும் கூறியவராவார்.

இலங்கையின் அரசமைப்பில் பௌத்தம் அதியுயர் நிலையில் காணப்படல் வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு ஆதரவளிப்பவராக ரணில் காணப்படுகின்றார். அத்துடன் இனப்பிரச்சினை மற்றும் தமிழ் மக்களின் முக்கிய மனக்குறைகளுக்குத் தீர்வாக கூட்டாட்சி என்பதை நிராகரிக்கும் நபராகவும் அவர் உள்ளார். இன முரண்பாட்டை ஏற்படுத்தி அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு நோக்கிய கோரிக்கைகள் என்பவற்றைப் பொறுத்தவில் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ராஜபக்ஷக்கள் இடையே எந்த வித வேறுபாடும் இல்லை.

தமிழர்களின் அரசியல் உரிமைகள், தமிழ் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட வடக்கு கிழக்கு பிரதேசங்களில் இராணுவப் பிரசன்னத்தை அகற்றுதல் மற்றும் யுத்தக் குற்றங்களுக்கு பொறுப்புக் கூற வைத்தல் போன்ற விடயங்கள் போராட்டக்காரர்களால் மட்டுப் படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளடக்கப்பட்டுள்ளமை தற்போது இடம்பெறும் போராட்டங்களில் தமிழ் சமூகத்தின் பங்கேற்பை மட்டுப்படுத்தும் காரணிகளுள் ஒன்றாக அமைந்துள்ளது.

தெற்கிலுள்ள மக்கள் இலங்கை அரசாங்கத்தின் புதிய முகம் ஒன்றைக் காணும் வேளை, சிங்கள இராணுவம் சிங்கள சமூகத்தை நோக்கித் தனது துப்பாக்கிகளை நீட்டுவதைக் கண்டு அந்தச் சமூகம் அதிர்ச்சியில் உறைவதை ஒரு வேடிக்கையான விடயமாகவே தமிழ் மக்களால் நோக்க முடிகின்றது.

2020 ஆம் ஆண்டு இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆற்றிய உரையில் அரசாங்கம் சிங்கள மக்களுக்கு எதிராகவும் திரும்பும் என எதிர்வு கூறியிருந்தார். எவ்வாறாயினும், அரசாங்கம் தற்போது சிங்கள மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தும் வலு வடக்கு கிழக்கில் தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட வலுவுடன் ஒப்பிடும் வேளை கட்டுப்பாடு மிக்கதாகவே காணப்படுகின்றது. இராணுவம் வடக்கு கிழக்கில் எங்கும் வியாபித்துள்ளது, அது தமிழ் மக்களின் நாளாந்த வாழ்வில் பின்னிப் பிணைக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது. ஏழு பிராந்திய கட்டளைத் தளங்களைச் சேர்ந்த 3 லட்சத்துக்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் அங்கு நிலை கொண்டுள்ளனர். இந்த ஏழு கட்டளைத் தளங்களில் ஐந்து தளங்கள் நாட்டின் மூன்றில் ஒரு பகுதிக்கும் குறைவான, தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட வடக்கு கிழக்கு பிரதேசங்களில் காணப்படுகின்றன. தமக்கு எதிரான வன்முறைகளைப் பல தசாப்தங்களாக மேற்கொண்டதன் காரணமாகத் தமிழ் மக்கள் இராணுவத்தை வெறுக்கும் மனநிலையில் உள்ளனர். இந்நிலையில் யுத்தம் நிறைவுற்றதன் பின்னரும் தமிழர்களின் பிரதேசங்களில் இராணுவம் நிரந்தரமாக பிரசன்னமாக இருப்பது தமிழர்களுக்கு தீங்கான விடயமாக அமைந்துள்ளது.

மே 18 ஆம் திகதி தமிழ் மக்கள் தமிழ் இனவழிப்பு நாளை நினைவுகூர்கின்றனர். பாரம்பரியமாக இந்நினைவு நாளில் வடக்கு கிழக்கு முழுவதும் ஒன்று கூடல்கள் இடம்பெறுகின்றன. கடந்த வருடம் நினைவுகூரல் நிகழ்வுகளை நடத்தியமைக்காக தீங்கு மிக்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 10 தமிழர்கள் கைது செய்யப்பட்டதுடன் மேலும் பலர் பாதுகாப்பு படையினரின் தொந்தரவு மற்றும் மிரட்டலை எதிர்கொண்டனர் என அறிக்கையிடப்பட்டுள்ளது. இறந்த தமிழர்களுக்காக எழுப்பப்பட்ட நினைவுச் சின்னம் ஒன்று அழிக்கப்பட்டது. இந்த வருடம், கோட்டா எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமுலாக்கப்பட்ட அவசரகால ஒழுங்கு விதிகளை முல்லைத்தீவில் உள்ள தமிழ் மக்களை மிரட்டுவதற்காகப் பொலிஸார் ஏற்கனவே பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை எந்த வித கோட்டா எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சட்ட விரோதமாக ஒன்று கூடும் மக்கள் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளுமாறு தமக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது எனக் கூறி பொலிஸார் தமிழ் பொதுமக்களை அச்சுறுத்துகின்றனர். யுத்தத்தில் கொல்லப்பட்ட தமிழ் மக்களை நினைவுகூர்வதற்கான ஏற்பாடுகள் வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், தாக்குதலுக்கான சாத்தியங்கள் அதிகமாகியுள்ளதுடன் புதிதாக பிரதமர் நியமனம் பெற்ற ரணில் விக்கிரமசிங்கவுக்கான ஆரம்ப சோதனைக் களமாகவும் இது அமைந்துள்ளது.

மே 18 தமிழ் மக்களின் இனப்படுகொலை நினைவு கூரல் தினமாக அனுஷ்டிக்கப்படும் வேளை தெற்கில் இத்தினம் வெற்றியைக் கொண்டாடும் தினமாக அமைவது வழமையாகும். இவ்வருடம் கோட்டா எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின்போது இந்தத் தினத்தில் காண்பிக்கப்படும் எதிர்வினை தமிழ் மக்களால் எழுப்பப்பட்டுள்ள கரிசனைகளை போராட்டக்காரர்கள் எவ்வாறு உள்வாங்கியுள்ளனர் என்பதற்கான முக்கிய குறிகாட்டியாக அமைந்துள்ளது. குறிப்பாக, இத்தினத்தில் இராணுவம் நினைவேந்தும் மக்களுக்கு தொந்தரவை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் இவ்விடயம் முக்கியத்துவம் பெறுகின்றது. பழைய பிரதமர் ஆறாவது தடவையாகவும் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ் மக்களுக்கு தெளிவாகத் தெரிந்த விடயம் மற்றையவர்களுக்கும் தெளிவாகத் தெரிந்த விடயமாகவே இருக்க வேண்டும் – அதாவது, இன முரண்பாட்டுக்கு அடிப்படையாக அமைந்த காரணங்களை அகற்றும் வகையில் ஆட்சி முறையில் அடிப்படையான மீள்கட்டமைப்பு ஒன்றை மேற்கொள்ளாமல், அத்துடன் யுத்தத்தில் இழைக்கப்பட்ட பாரிய அட்டூழியங்களுக்கு நீதி வழங்கப்படாமல் மற்றும் பொறுப்புக் கூறல் மேற்கொள்ளப்படாமல் இருப்பின் இலங்கையில் கடந்த காலத்தில் இடம் பெற்ற விடயங்களே மீண்டும் ஏற்படுவதுடன் அனைத்து குடிமக்களுக்குமான ஒருமைப்பாடு மற்றும் வளமான வாழ்வு என்பன கனவாகவே அமையும்.

**அல் ஜெஸீராவில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இது.**

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் -16**

# புலம்பெயர் மக்களின் எதிரொலியும் தாக்கமும்



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்கள் மட்டுமல்ல, மரணித்தவர்கள் யாபேரினதும் நினைவுகளும், அவர்களுக்கு தரப்பட வேண்டிய அனுட்டானங்களும் தடுக்கப்படத் தேவையற்றவை என தாம் கருதுகிறார் என்று ரணில் தெரிவிக்கிறார்.

தனிமனிதஎதிர்பார்ப்புகள், அவர்களது மத நம்பிக்கைகள், நாட்டினது மதங்கள் எல்லாவற்றினதும் கலாச்சாரங்களினதும் எதிர்பார்ப்பும் கூட இதுதான்.

ஆனால் வெற்றியைக் கொண்டாட – அழிப்பு நாசங்களை ஆனந்தமாக்க – முள்ளிவாய்க்கால் வரையான அழிவுகளை நியாயப்படுத்த – பின்னர் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் தாங்கள்தான் அதிகாரத்துக்கும் சிங்கள மக்களின் பாதுகாப்புக்கும் தகுதியானவர்கள் என்று உரைக்க – இந்த விடயங்களையே, இந்தப் பண்பு இயல்புகளையே பயன்படுத்தி மீண்டும் அதிகாரத்துக்கு முன்னேறி வந்தவர்கள் ராஜபக்ஷக்கள்.

முள்ளிவாய்க்கால் போரின் முடிவில் சிங்களமக்களிடையே அவர்கள் விதைத்த வெற்றிக்களிப்பு ஆர்ப்பாட்டங்களும், ஆராவாரங்களும், எடுப்புகளும் தேவையற்றவை, மறு தரப்புகளுக்கு மன வலிகளையும் உணர்வலைகளையும் ஏற்படுத்திப் பெரிதும் பாதிக்கும் என்று சர்வதேச நாடுகளும் பிற பொதுத்தரப்புகளும் கூறியவற்றை அவர்கள் பெரும்பான்மை மக்களாகக் கணக்கு எடுக்கவில்லை.

ஆனால், ரணிலோ மக்களின் உணர்வுகளைப் பற்றி அலட்டிக்கொள்ளாமல் வேறு விதமாகக் கையாண்டார். முள்ளிவாய்க்கால் மரணங்களைப் பற்றி பேசும் போது அந்த நினைவுகளை வைத்து அரசியல் செய்யக்கூடாது, அவை இறந்தோரின் மத வழிபாட்டுக்குரிய விவகாரங்களாகக் கருதி அவ்வளவில் முடிதல் வேண்டும் என அவர் வேண்டுகிறார். ஒரு வழியில் பார்த்தால் அந்த மரணங்களோடு – பிரபாகரனின் மரணத்துடன் – தமிழ்மக்களின்அரசியல்கொள்கைகளும் மரித்துப் போய் விட்டன, அதற்குப் பின் அவர்களின் பொருளாதார அபிவிருத்தியே கவனத்தில் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்க வேண்டும், தற்சமயம் நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள வேண்டும், அதுவே முக்கியம் என்று அவர் கூறுவதில் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்துப் பேசுவது தேவையற்றது என்பது நாசூக்காகத் தெளிவாக வெளிப்படுகிறது.



இந்தப் பின்புலத்தில், காலிமுகத் திடலில் முதன்முறையாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நடத்தியமை அதிகாரத்தின் மனக் கோலங்களை மாற்றுமா என்பதுதான் கேள்வி.

மனோ கணேசன் வெளிப்படையாகவும் ஆணித்தரமாகவும் கூறுவதுபோல ஆமதுருமாரை அரசியலிலிருந்து ஒதுக்கி விட்டால்தான் நாடு முன் னேறும் என்பது பிஜித் தீவுகளில் நடந்த முன்னுதாரணம். (ஏற்கனவே அது குறித்து இத்தொடரில் விவரித்திருக்கி றேன்) ஆனால் அது இந்த நாட்டில் சாத்தியமா?

இடதுசாரிக் கட்சிகளான லங்கா சம சமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் தொழிலாளர் வர்க்கத்துடன் சேர்ந்து முன்னெடுத்த போராட்டத்தினால் டட்லி சேனநாயக்கா பிரதமர் பதவியை துறந்த போது, அந்தப் போராட்டத்திற்கு ஆதரவாக புத்த குருமார் இருந்தனர். அவர்களது முன்னெடுப்பால் இந்த ஆதரவுகள் 1956 தேர்தலில் பண்டாரநாயக்காவினால் அவரது பக்கம் திசை திருப்பப்பட்டு, அவர் வெற்றியீட்ட, அது சிங்கள – பௌத்த அரசியலுக்கு வழி வகுத்தது.

அதுபோலவே இன்று மேலெழுந்து நிற்கும் போராட்டத்திற்கும் பௌத்த குருமார் ஆதரவாக நிற்கிறார்கள். ஆனால் அவர்களில் சிலரின் முகநூல் பேச்சுக்களைக் கேட்கும் போது ஆதங்கமாக இருக்கிறது. ஒரு மதத் துறவியாக அவர்களது முகபாவங்களும், உடல் அசைவின் போக்குகளும் பாகைளும் மொத்தத்தில் உடல் மொழியும் பல உணர்வுகளை ஏற்படுத்துகின்றன. இந்தப் போராட்டமும் ஒருவழியில் 1956இல் இருந்த மாதிரி திசை திருப்பப்பட்டு, பொருளாதார மீட்சி என்ற போர்வையில் சிங்கள, பௌத்த பேரினவாதக் கட்டுக்குள் அது சங்கமமாகி விடுமா என்று அங்கலாய்ப்பு உண்டு

ஆகவே தமிழ் மக்கள் காலிமுகத் திடல் போராட்டங்களையும் மிக அவதானமாக அணுகி, அவற்றில் இருந்து பெறக் கூடிய ஆதரவுகளோடு உரிமைகளுக்கான வழிகளையும் அவற்றை வளர்த்தெடுக்கவும் முயற்சிக்க வேண்டும்.

வழமைபோலவே மாற்று வழிகளை சிந்திக்க விரும்பாமல், நடந்து முடிந்த பேச்சுவார்த்தைகளின் காகிதக் கட்டுகளைத் திரும்பத் திரும்ப எடுத்துச் சென்று பேசிக் கொண்டிருப்பதால் நன்மைகள் பிறக்கப் போவதில்லை. அந்தக் கோரிக்கைகளை எப்படி முடக்குவது என்பது இன்று பழையபடி பதவியேற்றிருக்கும் ரணில் வரை எல்லா சிங்கள தலைவர்களும் தெரியும். அதற்கு அவர்கள் வழிகள் வகுத்தவர்கள். 'அவர்கள் ஏமாற்றிவிட்டார்கள், அவர்களை நம்பினோம், என்ன செய்வது, இவர் பரவாயில்லை' என்று ஒவ்வொரு கட்டுமரமாக மாறி மாறி ஏறியமையொழிய, இது கடல் கடக்க உதவுமா என்று பார்க்கவில்லை.

காலிமுகத்திடலில் முள்ளிவாய்க்கால் நினைவை முன்னெடுத்தவர்களையும், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இருந்து முள்ளிவாய்க்கால் சென்று பங்குபற்றிய சிங்கள மாணவர்களையும் சம்பந்தனும் எமது மற்றத் தலைவர்க ளும் சந்தித்து, அவர்களுடன் சேர்ந்து அமர்ந்திருந்து தேநீர் அருந்திப் பேசுவது, ரணிலுடன் இருந்து தேநீர் அருந்தி பேசி வருவதிலும் பார்க்க இன்றைய நிலையில் எவ்வளவோ நல்லெண்ணங்களை வளர்க்கும். தமிழ் மக்களுக்கும் தங்களது அங்கலாய்ப்புகளை அவர்களுடன் நேருக்கு நேர் பேசுவது பல புது அத்திவாரங்களை தோற்றுவிக்கலாம். ஒரு நாட்டுக்குள் ஒரு மக்களாக வென்றா லென்ன, இரு தேசங்களானாலென்ன அந்தப் புரிந்துணர்வு அவசியம்.

தமிழ்மக்களது நாதியற்ற நிலைமையில் மதங்கள், ஞானங்கள் அவற்றுக்கான போராட்டங்கள் எனும் போது, எனது மூத்த சகோதரி எனது பார்வைக்கு என்று அனுப்பிய பதிவின் சாரத்தை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்

அவருக்கும் எனது குடும்பத்தினருக்கும் நான் இளவயதில் இருந்தே உழைப்பைக் குறிவைத்து சட்டத்தரணியாகப் பணியாற்றாது, தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் பாடுபடுவதைப் பற்றிய விசனங்கள் இருந்தன.

இன்று அவற்றிற்காகப் பணியாற்றும் பல இளைய சட்டத்தரணிகள் பற்றிப் படிக்கிறேன். எதிர்மறைக் கருத்துக்கள் கொண்டிருந்தாலும் அவர்களை மதிக்கிறேன். அவர்களில் ஒரு சிலரைத் தவிர ஏனையோரோடு நான் பணியாற்றியவன் அல்லன். நானும் நீதியரசர் விக்னேஸ்வரனும் சமகால சட்டத்தரணிகளாகப் பணியாற்றியவர்கள்தான். சிறிகாந்தா இன்னுமொருவர். வாரத்தில் ஒரு முறையாவது நண்பர்களாக நீதிமன்ற வளாகங்களிலும் வேறிடங்களிலும் சந்திப்பது வழமை.

மூளை நோயினால் பாதிப்படைந்து வலது குறைந்திருந்த சிறுவர்களுக்குப் பராமரிப்புத் தருவதற்காக 'பிரித்திபுர சிறுவர் இல்லம்' என்று ஓர் அமைப்பு இருந்தது. இது வத்தளையில் இருந்து இயங்கியது. அதன் விஸ்தரிப்புக்கு நான் அவர்களின் சட்டத்தரணியாக இடம் தேடிய பொழுது அப்பொழுது சட்டத்தரணியான நண்பர் விக்னேஸ்வரன் தன் உறவினரான திருமதி இராமேஸ்வராவின் 50 ஏக்கருக்கு மேலான காணியை கொட்டகலைப் பகுதியிலிருந்து நன்கொடையாக பெற்றுத் தந்தார்.

அந்த நிலையத்துக்கு இளைஞர்களாக பிரபாகரன், உமா மகேஸ்வரன், ஊர்மிளா, சந்ததியார் போன்றவர்களை அழைத்து சென்று, கெண்ட், டொலர் பண்ணைகள் போன்றவற்றில் இவை போல காப்பகங்கள் அமைக்க வேண்டும் என்று பேசியமை எல்லாம் ஞாபகம் உண்டு. பிரபாகரனிடம் மட்டுமல்ல, எல்லோர் மனங்களிலும் அது பதிந்தது. பின்னாளில் பிரபாகரனும் விடுதலைப் புலிகளும் உருவாக்கிய செஞ்சோலை போன்றவற்றிற்கு இவை ஊற்றாக இருந்தன என்பது எனது நம்பிக்கை.

(வளரும்)

